# இராசராசன்

ஆசிரியர்

சா. கணேசன்



தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
சென்னை - 600 008
2010 - திருவள்ளுவர் ஆண்டு 2041

தஞ்சைப் பெருவுடையார் கோயில்
ஆயிரம் ஆண்டு நிறைவு விழா - சிறப்பு வெளியீடு

# இராசராசன்

ஆசிரியர்

**சா. கணேசன்**

பொதுப்பதிப்பாசிரியர்

முனைவர் **தி.ஸ்ரீ.ஸ்ரீதர்** இஆப,

முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

வெளியீடு

தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

சென்னை - 600 008.

2010 - திருவள்ளுவர் ஆண்டு 2041

மறுப்பதிப்பு - 2010 / திருவள்ளுவர் ஆண்டு 2041
தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை
வெளியீடு எண் - 95
2000 பிரதிகள்

© தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை

இராசராசன்

ஆசிரியர்
சா. கணேசன்

பொதுப்பதிப்பாசிரியர்
முனைவர் தி. ஸ்ரீ. ஸ்ரீதர், இஆப,

**விலை ரூ. 16.00**

அச்சிட்டோர்
இராயப்பேட்டை எழுதுபொருட்கள் மற்றும் அச்சு சார்
உபபொருட்கள் உற்பத்தியாளர்கள் கூட்டுறவு சங்கம்
26, கோயா அருணகிரி தெரு,
இராயப்பேட்டை,
சென்னை-600 014

# இரண்டாம் பதிப்புரை

சோழப் பேரரசின் மாமன்னன் இராசராசன் திராவிட கட்டடக்கலையின் தனிப்பெரும் சான்றாக இன்றளவும் உயர்ந்து நிற்கும் தஞ்சைப்பெருவுடையார் கோயிலினை எடுப்பித்துள்ளான் இம்மாமன்னனைப் பற்றிய வரலாற்றுச் செய்திகளை அறியும் வகையில் மறைந்த திரு. சா. கணேசன் அவர்களால் எழுதப்பட்டு இத்துறையில் வெளியிடபட்ட நூல் 'இராசராசன்'.

இந்நூலாசிரியர், மாமன்னன் இராசராசனைப் பற்றிய பல வரலாற்றுச் செய்திகளை கல்வெட்டுகள், செப்புப்பட்டயங்கள் மற்றும் இலக்கியங்கள் வாயிலாக சிறப்பாக எழுதியுள்ளார்கள். குறிப்பாக தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பணிபுரிந்த பணியாளர்கள் அவர்கள் பெற்ற உரிமை குறித்து கல்வெட்டுச் சான்றுகளைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது சிறப்பாகும்.

தஞ்சைப் பெருவுடையார் கோயில் எடுப்பித்து ஆயிரம் ஆண்டுகள் நிறைவடைந்த இத்தருணத்தில் இந்நூலினை வெளியிடுவதால் இத்துறை பெருமை கொள்கிறது.

இந்நூலிற்கான பதிப்புப்பணியினை மேற்கொண்ட இத்துறை கல்வெட்டாய்வாளர்கள் திரு. கி. சு. சம்பத், மற்றும் திரு. இரா. சிவானந்தம் அவர்களுக்கும் இந்நூலினை நல்ல முறையில் டிடிபி செய்து அட்டைப் படம் வடிவமைத்த அச்சுக்கோர்ப்பாளர் திருமதி தே. சத்தியவதி, திருமதி கு. கோகிலா மற்றும் அச்சுப்பிழைத்திருத்திய திருமதி கோ. செம்மலர் ஆகியோருக்கும் எனது பாராட்டுகள். நூல் வெளியிட நிதியுதவி நல்கிய தமிழ்நாடு அரசுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

தொல்லியலாளர்கள், வரலாற்று ஆர்வலர்கள், அறிஞர்கள், கல்லூரி மற்றும் பள்ளி மாணவர்கள் என அனைத்துத் தரப்பினரும் இந்நூலினை படித்து பயன்பெறவேண்டும் என அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

**தி. ஸ்ரீ. ஸ்ரீதர்**
முதன்மைச் செயலாளர் (ம) ஆணையர்

சென்னை-8
18-06-2010

# பொருளடக்கம்

வரிசை எண் பக்கம்


| வரிசை எண் | | பக்கம் |
|---|---|---|
| 1. | இராசராசன் குலமுறை | 1 |
| 2. | இராசராசன் தோற்றம் | 19 |
| 3. | இராசராசன் வெற்றிகள் | 28 |
| 4. | திருமுறை கண்டது | 38 |
| 5. | பெரியகோயில் எடுத்தது | 43 |
| 6. | செப்புத் திருமேனிகள் | 48 |
| 7. | திருவிழாக்கள் | 52 |
| 8. | பணி மக்களும், கூலி வகையும் | 53 |
| 9. | தஞ்சாவூர் தெருக்கள் | 56 |

அட்டைப்படம் :

முன் அட்டை : முதலாம் இராசராசனும் கருவூர்தேவரும் - ஓவியம்

பின் அட்டை : தஞ்சைப் பெருவுடையார் கோயில் விமானம்

# இராசராசன் குலமுறை

சோழ மன்னர்களில் ஒப்பற்றவனாகத் திகழ்ந்த முதலாம் இராசராச சோழனுக்கு முன்னர் பல சோழ மன்னர்கள், சோழ நாட்டைச் சிறப்பாக ஆண்டிருக்கிறார்கள். சோழன் என்ற பெயர் எவ்வாறு வந்தது என்பதற்குக் காரணங்கள் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. தமிழகத்தின் ஒரு பகுதியைத் தொன்று தொட்டு, சீருடனும் சிறப்புடனும், ஆண்ட ஒரு மன்னர் குலத்தைக் குறிக்கும் குடிப் பெயராகத் தான் இதனைக் கொள்ள வேண்டும். முன்னையோர் கண்ட முடிவும் இதுவே! சோழர் என்ற பெயரைத் தவிர இவர்களுடைய குலத்தைக் குறிக்க செம்பியன், வளவன் முதலிய பெயர்களும் பண்டைக்காலத்திலிருந்து வழக்கில் இருந்து வருகின்றன. இவர்களுடைய ஆட்சி பெரும்பாலும் காவிரி நதியை மையமாகக் கொண்டு விளங்கிய காரணத்தால் இவர்களைப் 'பொன்னி வளநாடர்' எனவும் கூறுவர்.

சோழர்களுடைய குலமுறையை மூன்று பிரிவாகப் பிரித்துக் கூறலாம் :

(1) வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்தவர்கள்.

(2) வரலாற்றுக் காலத்தில் (தெளிவாகக் கூறப்புகுங்கால்) சங்க காலத்தில் வாழ்ந்தவர்கள்.

(3) சுமார் கி.பி. 850-ல் விசயாலயன் என்ற மன்னனால் மீண்டும் நிலை நிறுத்தப்பட்ட சோழப் பேரரசைச் சார்ந்த மன்னர்கள்.

## வரலாற்றுக்கும் முன்

சோழ மன்னர்களுடைய குலமுறையைக் கலிங்கத்துப் பரணி "இராசபாரம்பர்யம்" என்ற தலைப்பில் எடுத்துக் கூறுகிறது. ஒட்டக்கூத்தரால் பாடப்பெற்ற விக்கிரமச்சோழன் உலா, குலோத்துங்கச் சோழன் உலா, இராசராசன் உலா ஆகிய மூவருலாவிலும் இது குறிக்கப்பட்டுள்ளது. சோழர்களுடைய சில சாசனங்களிலும் குலமுறை குறிப்பிடப்பட்டுள்ளது. அவற்றுள் சிறப்பாக முதலாம் இராசேந்திர சோழனுடைய திருவாலங்காட்டுச் செப்பேட்டிலும், வீரராசேந்திர சோழனுடைய கன்னியாகுமரிக் கல்வெட்டிலும் இது புலப்படுத்தப்படுகிறது.

சோழர்கள் சீர் தந்த தாமரையாள் கேள்வனாகிய திருமாலிடமிருந்து தங்கள் குலம் உதித்ததாகக் கூறுவர். திருமாலின் உந்திக் கமலத்து, பார்தந்த ஆதிக் கடவுள் திசைமுகன் தோன்றினார். அவர் மரீசி என்னும் அண்ணனைத் தோற்றுவித்தார். மரீசியின் மகன் காசிபன். காசிபன் கதிரோனாகிய ஆதித்தனைத் தோற்றுவித்தான். அவனுடைய மகன் மனு என்னும் பெயர் கொண்ட பேராளன். அவனே ஆவினது கன்றுக்கு நிகராகத் திருத்தேரைத் தன் காதல் மைந்தன் மீது ஊர்ந்த மறவோன், மனுநீதி சோழன் என்பான். அவனுடைய மகன் இட்சுவாகு. அவனுக்கு அடுத்து மாந்தாதா. ஒரு துறையில் புல்வாயும் புலியும் நீர் அருந்தும் வண்ணம் நாட்டமைதியைக் காத்த அறவோன் எனப் புகழப்படுபவன் அவனே! அவனுக்கு அடுத்து இந்திர விமானம் ஊர்ந்த சோழன். அவனுக்கு அடுத்து தனது ஆற்றலால் துயில் காத்து, அரமகனின் மங்கலம் காத்து, அமராபதி எயில்காத்த முசுகுந்த சக்கரவர்த்தி. அடுத்த ஒருவன், தேவரும் தானவரும் கடல் கலக்க எழுந்த அமுதத்தைக் கடவுளும் வானவர்களும்

உண்ணும்படி வகை செய்தவன். அடுத்து, சிறிய புறாவுக்காகத் தானே துலைத்தட்டில் ஏறிய சிபிச்சோழன். வச்ராயுதத்தையுடைய இந்திரனை காளை வாகனமாக்கி அதில் ஊர்ந்து போர் புரிந்த காகுத்தன் அடுத்தவனாவான். அடுத்து, பத்துத் தேர்களையுடைய மாற்றார்களை ஒரேத் தேரால் வென்ற தசரதச்சக்கரவர்த்தி. அடுத்து, இராவணனை வென்ற இராகவன். கூற்றுவனுக்கு வழக்குரைத்த செம்பியன் அடுத்தவனாவான். தன்னுடைய செங்கோலுக்கு அஞ்சி, மக்களுயிர் கவர எமனும் நடுங்கிய காரணத்தால் உயிர்பிரியா முதியோர்கட்காக முதுமக்கள் தாழி ஆக்கச் செய்த சுரகுரு அடுத்து வந்தவன். அவனையே நாபாகன் என்றும் முன்னையோர் குறிப்பர். ஆகாயத்தில் திரிந்த மதில்களாகிய கோட்டையைத் தகர்த்தெறிந்த 'தூங்கெயில் எறிந்த தொடித் தோட் செம்பியன்' அடுத்தவனாவான், பின்னர் மேல் கடலையும், கீழ்க்கடலையும் ஒன்று சேர்த்து அருஞ்செயல் புரிந்து ஓர் அரசகுமாரியை மணம் புரிந்த சமுத்திரசித். பின்னர் குடமலையை அறுத்துக் காவிரி தந்த சிவூகன். இவனுக்குக் கவேரராசன், காந்தமன், சித்ரரதன் என்ற பெயர்களும் உண்டு. அடுத்து, இந்திரனைப் புலியென்று கொடியில் வைத்த ஒருவன். வாதராசனை பணி கொண்ட ஒருவன். விமானத்தில் வானமிசை ஊர்ந்த ஒருவன். பாரதப் போரில் தருமனுக்கு உதவி செய்த ஒருவன். இவர்களனைவரும் வரலாற்றுக்கு முற்பட்ட காலத்தில் வாழ்ந்திருக்க வேண்டும்.

தமிழகத்தில், அக்காலத்தில் ஆங்காங்கே பல கதைகள் வழக்கில் இருந்திருக்க வேண்டும். அவையே சோழர் குலமுறை வரலாற்றோடு இணைந்து விளங்குகின்றன. இதில் எது கதை, எது வரலாறு என்று பிரித்துக்கூற முடியாதபடி ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து காணப்படுகின்றன. எனினும் சிபிச் சோழன்,

மனுநீதிச் சோழன் ஆகிய இவர்களுடைய வரலாறு சங்க காலத்திலேயே சிறப்பாக வழக்கில் இருந்திருக்கிறது. குடமலையை அறுத்துப் பொன்னி நதியைக் கொடுத்ததாக ஒரு மன்னன் குறிக்கப்படுகிறான். கரிகால் வளவனுக்கு முன்னர் காவிரியாறு தமிழகத்திற்கு உதவும் வகையில் செய்த ஏதோ ஒரு நிகழ்ச்சியை உணர்த்துவதாக இதைக் கொள்ளலாம் சுராதிராசன் முதல் வரும் சோழர்களில் ஒருவன் சோழ மண்டலம் அமைத்தபின் ஆண்ட அரசர்கள் இராசகேசரி, பரகேசரி என்று மாறி மாறிப் பட்டம் பூண்டார்கள் என்று கலிங்கத்துப்பரணி குறிக்கிறது. ஆனால் கதைகளில் வரும் சோழ மன்னர்களுக்கோ அல்லது சங்க காலத்தில் வாழ்ந்த சோழ மன்னர்களுக்கோ இப்பட்டங்கள் இருந்ததாகத் தெரியவில்லை.

## சங்க காலத்தில்

சங்க இலக்கியத்தில் குறிக்கப்பட்டுள்ள சோழ மன்னர்கள் கி.மு. மூன்றாம் நூற்றாண்டிலிருந்து கி.பி. இரண்டாம் நூற்றாண்டு வரை ஆண்டவர் ஆவார்கள் எனக் கருதப்படுகிறது. அவர்களில் யார் முன் ஆண்டவர், யார் பின் ஆண்டவர் என்பதிலே கருத்து வேறுபாடுகள் உண்டு. அதைத்திட்டவட்டமாக வரையறுத்துக் கூறுவதும் கடினம். சங்ககாலச் சோழர்களில் கரிகாலன், பெருநற்கிள்ளி, கோச்செங்கணான், கோப்பெருஞ் சோழன், நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி முதலியோர் சிறந்தவர்களாவார்.

சங்க இலக்கியங்களில் குறிக்கப்பட்டுள்ள சோழ மன்னர்களில் மிகவும் சிறந்தவன் கரிகாற் பெருவளத்தான். இவன் அழகிய தேர்களையுடைய இளஞ்சேட் சென்னி என்பவனின் புதல்வன். இவன் சிறுவனாக இருக்கும் பொழுது மாற்றார்களால்

சிறையில் அடைக்கப்பட்டு, அதிலிருந்து தப்பி வெளியேறும்போது இவனது கால்கள் கருகியதால் 'கரிகாலன்' என்று பெயர் பெற்றான் எனக் கூறுவர். இவன் பாண்டியர்களையும், சேரனையும் அவருடன் வந்த பதினொரு வேளிர்களையும் வெண்ணி என்ற இடத்தில் தோற்கடித்துப் பெரும் வெற்றி கண்டான். தஞ்சையிலிருந்து சுமார் பதினைந்து கல் தொலைவிலிருக்கும் கோவில்வெண்ணியே இப்போர் நிகழ்ந்த இடம் என்று குறிப்பர். இப்போரில் தோல்வியுற்ற சேரமன்னன் நெடுஞ்சேரலாதன் புறப்புண்ணால் நாணி வடக்கிருந்து இறந்தான். வாகைப்பறந்தலை என்ற இடத்தில் கரிகாலன் ஒன்பது வேளிர்களைத் தோற்கடித்தான் என்று பரணர் குறிக்கிறார். ஒளியர், அருவாளர், வடவர், குடவர், பாண்டியர், இருங்கோவேள் முதலியோரை இவன் அழித்தான் என்று பட்டினப்பாலை குறிக்கிறது. கரிகாலன் நாங்கூர் வேளிர் மகளிரை மணந்தான் என்று அறிகிறோம். இவன் உறையூரை வளப்படுத்திச் சிறந்த தலைநகராக்கினான். காவிரிப்பூம்பட்டினம் சிறந்த துறைமுகமாகத் திகழ்ந்தது. இவன் காலத்தில் தமிழகத்திற்கும், மேலை நாடுகளுக்கும் வாணிகத் தொடர்பு சிறந்திருந்தது. காவிரி ஆற்றிற்குக் குறுக்கே கல்லணை அமைத்து, காவிரியாற்றின் கரைகளையும் எழுப்பிச் சிறந்த வேளாண்மைக்கு அடிகோலியவன். இவனுக்கடுத்து நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி என்ற இருவர். சகோதரர்களான போதிலும், சோழ நாட்டை இருபகுதிகளாகப் பிரித்துக்கொண்டு ஆண்டு வந்தனர். இவர்களிருவருக்கும் காரியாறு என்ற இடத்தில் நடந்த போரில் நெடுங்கிள்ளி இறந்து போனான். பின்னர் கல்லாகியும் இடங்கொடுத்து நட்பின் சிகரமாகத் திகழ்ந்தவன் என்று போற்றப்படும் கோப்பெருஞ்சோழன். அவனுக்கு தன் மகனுடன் போர் புரியும் நிலை ஏற்பட்டது. பிறகு போரைத் தவிர்த்து வடக்கிருந்து உயிர் துறந்ததும், அவனுடன் பிசிராந்தையாரும் வடக்கிருந்து உயிர்

துறந்ததும் சங்கப் பாடல்களில் போற்றப்படுகின்றன. சோழ மரபிலே மிகச்சிறந்த வீரனாகவும், ஒப்பற்ற சிவபக்தனாகவும், கல்வியைப் போற்றுவதிலே ஈடு இணையற்றவனாகவும் திகழ்ந்த கோச்செங்கணான் அடுத்தவன் ஆவான். அவன் வெண்ணி, அழுந்தை முதலிய இடங்களில் மாற்றார்களை வெற்றி கண்டான். சிவபெருமானுக்கு எழுபது மாடக் கோயில்களைக் கட்டுவித்தவனாவான். 'எண்தோள் ஈசர்க்கு எழில் மாடம் எழுபது செய்துலகம் ஆண்ட செங்கணான் கோச்சோழன்' என்று திருமங்கை மன்னன் இவனைப் புகழ்ந்துள்ளார். இவன் முந்தைப் பிறவியில் சிலந்தியாகி, திரு ஆனைக்காவிலே சிவபிரானிடம் சிறந்த பக்தியோடு விளங்கியதால் சோழனாகப் பிறந்தாரென்று அப்பர் பெருமான் குறிப்பிடுகிறார்.

சிலந்தியும் ஆனைக்காவில் திருநிழற் பந்தர் செய்து
உலந்தவன் இறந்தபோதே கோச்செங் கண்ணானுமாக
கலந்தநீர் காவிரிசூழ் சோணாட்டுச் சோழர் தங்கள்
குலந்தனில் பிறப்பித்திட்டார் குறுக்கை வீரட்டனாரே.

என்று அப்பர் பெருமானால் போற்றப்படும் பேறு பெற்றவன். இம்மன்னன் கணைக்காலிரும்பொறையோடு பொருது, கணைக்காலிரும் பொறையைச் சிறைப்படுத்தினான். பொய்கை என்ற புலவர், களவழி என்ற பாடலை இவன் மீது பாட, அப்புலமைக்குப் பரிசாக மாற்றானாகிய சேர மன்னனை விடுவித்த பெருந்தகை. வீரத்திலும், புலமையைப் போற்றுவதிலும், சிவபக்தியிலும் இவனுக்கு ஒப்பாக முதல் இராசராசனைக் குறிக்கலாம். கோச்செங்கணானுக்குப் பிறகு சில சோழ மன்னர்கள் ஆண்டிருக்க வேண்டும். ஆனால் அவர்களைப் பற்றிய விவரங்கள் தெளிவாகக் கிடைக்கவில்லை.

சோழநாடு சங்க காலத்திற்குப் பிறகு களவரர் (களப்பிரர்) வசமாயிற்று என்று அறிகிறோம். காவிரிப்பூம்பட்டினத்தில் ஒரு பௌத்த விகாரத்தில் இருந்த புத்ததத்தர் என்ற பௌத்தத் துறவி எழுதிய வினயவினிச்சயம், புத்தவம்சாத்தகதா முதலிய நூல்களில் சோழ மண்டலத்தை அச்சுதவிக்காந்தன் என்ற களவர மன்னன் ஆண்டதாகக் குறிக்கிறார். களவரர் யார் என்பதைப் பற்றிப் பல கருத்துக்கள் கூறப்படுகின்றன. முடிந்த முடிவாக எதையும் சொல்லுவதற்கு உரிய சான்றுகள் இதுவரை கிடைக்கவில்லை. ஆயினும், திரு கே. ஆர். வெங்கடராம ஐயர் அவர்கள் கருத்து ஏற்புடையதாகத் தோன்றுகிறது. மைசூர்ப் பிரதேசத்தில் நந்தி மலைப்பகுதியிலிருந்து கோலார் வழியாகத் தமிழகத்தை அடைந்த ஒரு குறுநில மன்னர் குடியைச் சேர்ந்தவர்களே களவரர்களாக இருக்கக் கூடும். அவர்கள் நேரே காவிரிக் கரையை அடைந்து, சோழ நாட்டைக் கைப்பற்றி, அங்கு தங்கள் ஆட்சியை ஏற்படுத்தியிருக்க வேண்டும். 'கி.பி. 7,8,9 - ஆம் நூற்றாண்டுகளில் செந்தலையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட முத்தரையர்களே களவரராக இருக்கக் கூடும்' என செந்தலைக் கல்வெட்டில் முத்தரையர்கள் 'களவர்' என்று குறிக்கப்படுவதை திரு கே. ஆர். வெங்கடராம ஐயர் சான்றாகச் சுட்டிக் காட்டுகிறார்கள். களவரர்கள் முத்தரையர்கள்தானா, அன்றேல் களவரர்களுக்கும், முத்தரையர் களுக்கும் இருந்த தொடர்பு என்ன என்பன ஆராய்ச்சிக்குரியன. ஆனால் விசயாலயன் தன்னுடைய ஆட்சியை ஏற்படுத்துவதற்கு முன்னர் சுமார் இரு நூறு ஆண்டுகள் முத்தரையர்கள் தஞ்சைப் பகுதியை ஆண்டு இருக்கிறார்கள் என்பது தெளிவு. இப்பொழுது 'நியமம்' எனப்பெயர் விளங்கும் செந்தலை அவர்களுடைய தலைநகரமாகத் திகழ்ந்தது. தஞ்சையும் வல்லமும் மிகவும் சிறப்பு வாய்ந்த நகரங்களாக அவர்களுடைய ஆட்சியில்

திகழ்ந்திருக்கவேண்டும். செந்தலைக் கல்வெட்டில் முத்தரையன், 'தஞ்சையர்கோன்' என்றழைக்கப்படுகிறான். திருச்சிராப்பள்ளி மலையின் மேல், பின்புறத்தில் இயற்கைக் குகைத்தளம் ஒன்று உள்ளது. அதில் கி.பி. 6, 7-ம் நூற்றாண்டைச் சேர்ந்த எழுத்துக்களில் "தஞ்ச ஹரக" என்ற பெயர் காணப்படுகிறது. தஞ்சையைக் கைப்பற்றியவன் என்பது இதன் பொருள். பல்லவமன்னன் சிம்மவிஷ்ணு என்பான் காவிரிக்கரை வரை தன் ஆட்சியை விரிவுபடுத்தினான் என்று அவனுடைய செப்பேடு குறிக்கிறது. சிம்ம விஷ்ணுவோ அல்லது அவன் மகன் மகேந்திரனோ காவிரி வரையுள்ள நிலப்பகுதியைக் கைப்பற்றிய போது, தஞ்சையையும் கைப்பற்றி "தஞ்சஹரசு" என்ற பெயரைப் பூண்டிருக்கக் கூடும். இதுவரை கிடைத்துள்ள கல்வெட்டுகளில் தஞ்சையைக் குறிக்கும் மிகவும் தொன்மையான கல்வெட்டு இதுவே. கி.பி. ஏழாம் நூற்றாண்டை ஒட்டியே தஞ்சை சிறப்பைப் பெற்றிருந்தது என்பதற்கு இது ஒரு சான்றாகும். இதற்கு முன்பு தஞ்சையைப் பற்றிய வரலாற்றுச் செய்தி ஒன்றும் நமக்குத் தெரியவில்லை. கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து ஒன்பதாம் நூற்றாண்டு வரை முத்தரையர்கள் தஞ்சையை ஆண்டிருக்கிறார்கள். அவர்களுக்கு வடபுறத்தே பல்லவப் பேரரசும், தென்புறத்தே பாண்டியப் பேரரசும் அக்காலத்தே சிறப்புற்றுத் திகழ்ந்தன. அவ்விரு பேரரசுகளும் ஒன்றோடொன்று மோதும் போது முத்தரையர்கள் இடையிலே சிக்கித் தவித்தார்கள். தங்களுடைய நிலையைக் காத்துக்கொள்ள, எந்தப் பேரரசின் கை ஓங்குகிறதோ அத்துடன் இணைந்து கொண்டனர். எனவே தஞ்சை பல காலம் பல்லவர் களுடைய ஆதிக்கத்தின் கீழும் இருந்திருக்க வேண்டும்.

## விசயாலயன் முதல்

இந்த நிலையில் சுமார் கி.பி. 850 - இல் ஒரு மாபெரும் பேரரசைத் தோற்றுவித்த புகழாளனாக விசயாலயன் தோன்றினான்.

இவன் முதலில் உறையூரைத் தலைநகராகக் கொண்டு தன் ஆட்சியைத் தொடங்கியிருக்க வேண்டும். அப்பொழுது பல்லவர்களின் கீழ் ஒரு சிற்றரசனாக இருந்தான். தஞ்சையை ஆண்ட முத்தரையர்களோ, பாண்டியர்களுடன் சேர்ந்திருந்தனர். எனவே விசயாலயன் பல்லவ அரசர்களுக்கு உதவியாகத், தஞ்சையின் மீது போர் தொடுத்து முத்தரையர்களிடமிருந்து அதைக் கைப்பற்றினான். இத்துடன் முத்தரையர்களுடைய ஆதிக்கம் ஒடுங்கியது.

விசயாலயன் விளையாடுவதற்குத் தன் மனைவியைக் காதலுடன் எவ்வாறு கைப்பற்றுவானோ அவ்வாறு எழில் வாய்ந்ததும், சுதை வேலைப்பாடுகள் நிரம்பிய மாளிகைகளையுடையதுமான தஞ்சையை விளையாட்டாகக் கைப்பற்றினான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கிறது. கன்னியாகுமரி கல்வெட்டு, தஞ்சாபுரி குபேரனுடைய அழகாபுரியை ஒத்திருந்தது என்றும், அதை விசயாலயன் கைப்பற்றி, அங்கு தேவர்களாலும் வணங்கப்படும் நிசும்பசூதனிக்கு ஒரு கோயிலைத் தோற்றுவித்தான் என்றும் குறிக்கிறது. விசயாலயன் காலத்திலேதான் தஞ்சை சோழர்களுடைய தலைநகராக மாற்றப்பட்டது. நகர் விரிவாக்கப்பட்டு, கோட்டைக்கொத்தளங்களெல்லாம் சிறப்பாக அமைக்கப்பட்டன. தன்னுடைய தஞ்சை வெற்றியின் பெருமிதத்தால் இவன் 'தஞ்சை கொண்ட பரகேசரி ' என்ற பட்டம் பூண்டான். பல போர்களைப் புரிந்து, எத்தனையோ வெற்றிகளை இவன் அடைந்திருக்க வேண்டும். அதனாலேயன்றோ தொண்ணூற்றாறு விழுப்புண்கள் பெற்றவன் என்று இவனை மூவருலாக்களும் புகழ்கின்றன!

". . . மீதெலாம்

எண்கொண்ட தொண்ணூற்றின் மேலும் இரு மூன்று
புண்கொண்ட வென்றிப் புரவலன்."

என்று விக்கிரம சோழனுலாவும்,

"... அடுத்தடுத்துச்

சீறும் செருவில் திருமார்பில் தொண்ணூறும்

ஆறும் படுதழும்பின் ஆகத்தோன்"

என்று குலோத்துங்கனுலாவும்,

தொழும்புடைய ஆகத்துத் தொண்ணூறு மாறும்

தழும்புடைய சண்ட ப்ரசண்டன்.

என்று இராசராசனுலாவும் இவனைப் போற்றுகின்றன. இவன் காலத்திலிருந்துதான் பரகேசரி, இராசகேசரி என்ற பெயர்கள் சோழ மன்னர்களுக்கு மாறிமாறிக் காணப்படுகின்றன. விசயாலன் கி.பி. 850 லிருந்து 870 வரையிலும் ஆண்டான்.

அவன் மகன் ஆதித்த சோழன் (கி.பி. 871-907) ஆவான். இவன் முதலில் பல்லவ அரசனாகிய அபராசிதனின் சிற்றரசனாகத் திகழ்ந்தான். அவனுடன் சேர்ந்து திருப்புறம்பியம் என்ற இடத்தில் நடந்த போரில் பாண்டியனைத் தோற்கடித்தான். பிறகு தன்னுடைய படைவலிமையையும், துணைவலிமையையும் பெருக்கிக்கொண்டு அபராசிதன் மீதே போர் தொடுத்து, அவனைக் கொன்றான். இதுவரை சிற்றரசாகத் திகழ்ந்த சோழ அரசு இப்பொழுது தனி அரசாகத் தலை தூக்கியது. ஆதித்தன் விரைவில் தொண்டை மண்டலத்தையும் வென்று சோழப்பேரரசை உண்டாக்கினான். பின்னர் கொங்கு மண்டலத்தையும் வென்று, அதை சோழப்பேரரசுடன் சேர்த்தான். வடக்கே காளத்தியிலிருந்து வெள்ளாறு வரை, கொங்கு மண்டலம் உள்பட, ஒரு குடைக்கீழ்ச் சோழப்பேரரசைத் தோற்றுவித்தான். அக்காலத்தில் கேரளத்தை ஆண்டு வந்த ஸ்தாணுரவி என்பவனுடன் நட்புப் பூண்டிருந்தான். பல்லவ இளவரசி காடு வெட்டிகள் என்பவளை இவன் மணந்தான். இரட்ட மன்னன் இரண்டாம் கிருட்டிணனுடைய மகள் இளங்கோ பிச்சி என்பவள் இவள் பட்டத்தரசியாக விளங்கினாள்.

ஆதித்தன் ஒரு சிறந்த சிவபக்தன். தில்லைக் கூத்தனிடம் எல்லையில்லா அன்பு கொண்டவன். அதனால் கொங்கு நாட்டுப் போரில் வெற்றி பெற்றுத் திரட்டிவந்த பொன்னைக் கொண்டு தில்லைச்சிற்றம்பலத்திற்குப் பொன் வேய்ந்தான். சையமலையிலிருந்து புகார் வரை, காவிரியாற்றின் கரையில் சிவபிரானுக்கு நூற்றெட்டுத் திருக்கோயில்களை எடுப்பித்தான் என்றால் இவன் சிவபக்திக்கு ஈடும் எடுப்பும் எங்கு காண வல்லோம்?

"கோதிலாத் தேறல் குனிக்கும் திருமன்றம்
காதலால் பொன் வேய்ந்த காதலன்"

என்று விக்கிரம சோழன் உலா புகழ்பாடுவது இவனையே!

இவன் 'கோதண்டராமன்' என்ற ஒரு பட்டப் பெயரையும் மகிழ்ந்து சூடிக் கொண்டிருந்திருக்கிறான். காளத்தி அருகில் தொண்டைமானாடு என்ற இடத்தில், இவன் மரித்த இடத்தில் இவன் மகன் பராந்தகன் ஒரு பள்ளிப்படைக் கோயிலைச் சமைத்தான். அதற்குக் கோதண்ட ராமேச்சுரம் அல்லது ஆதித்தேச்வரம் எனப் பெயர் விளங்கியதாக அறிகிறோம். இங்ஙனம் இவனுக்கு இராமன்மீது ஏற்பட்ட ஈடுபாட்டிற்குக் கம்பனும், அவனுடைய இராமாயணமுமே காரணமாக இருந்திருக்க வேண்டும். செவிக்குத் தேன் என இராகவன் புகழினைத் திருத்தும், கவிக்கு நாயகனான கம்பன் இவன் காலத்து, இவன் நட்புக்கு உரியவனாய் வாழ்ந்தவன்.

இராமனுடைய குல முறையைக் கூற வந்த கவிச் சக்கரவர்த்தி கம்பன், "ஆதித்தன் குல முதல்வன் மனுவினை யார் அறியாதார்?" என்று தொடக்கத்திலேயே கூறுவதிலிருந்து இவ்வுண்மை தெள்ளிதிற் புலனாகும்!

ஆதித்தனுக்குப் பின், அவன் மகன் பராந்தகன் சோழப் பேரரசின் மன்னனாக முடிசூடி, அரசுக் கட்டில் ஏறினான்.

பராந்தகன் முடிசூடியவுடன் பாண்டியர்மீது படையெடுத்தான். அப்பொழுது பாண்டிய அரசனாக வீற்றிருந்த இராசசிம்மன் என்பவன் பராந்தகனிடம் தோற்று, ஈழ நாட்டின் 'மதுராந்தகன்' என்ற பட்டத்தைப் பெற்றான். ஈழத்துப்படை வெள்ளூர் என்ற இடத்தில் தோற்றோடியது. பாண்டிய மன்னன் தம்முடைய முடி, பண்டாரம் முதலியவற்றை எடுத்துக் கொண்டு ஈழத்துக்குள் தஞ்சம் புகுந்தான். பராந்தகன் 'மதுரையும் ஈழமும் கொண்ட பரகேசரி' என்ற பட்டத்தைப் பூண்டான். இரட்ட மன்னன் இரண்டாம் கிருட்டிணன் பராந்தகன் மீது படையெடுத்து, அவனிடத்தில் தோல்வியுற்றான். மேலும் பராந்தகன் பாணர்களையும், வைதும்பர்களையும் வென்றான். இவனுக்கு உறுதுணையாகக் கங்கமன்னன் இரண்டாம் பிருதிவீபதி என்பவன் இருந்தான். பராந்தகனுக்கு இராசாதித்தன், கண்டராதித்தன், அரிஞ்சயன் என்று மூன்று மக்கள் இருந்தனர். இளங்கோவான இராசாதித்தன் திருமுனைப்பாடி நாட்டில் ஒரு பெரும் சேனையுடன் தங்கி, சோழ நாட்டின் வடவெல்லையைக் காத்து வந்தான். இராட்டிரகூடத்தில் முடிசூடிய மூன்றாம் கிருட்டினன் பெரும் படையுடன் சோழ நாட்டின் மீது பாய்ந்தான். தக்கோலம் என்ற இடத்தில் நடந்த கடும்போரில் யானை மீதமர்ந்து வீரப்போர் புரிந்த இராசாதித்தன், பூதுகன் என்பவனால் கொல்லப்பட்டான். யானை மீது அமர்ந்து போர் புரியும் போது இறந்ததால் 'ஆனை மேல் துஞ்சிய தேவர்' என்று இவனை அழைப்பர். மூன்றாம் கிருட்டினன் காஞ்சியைக் கைப்பற்றி, செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு மாவட்டங்களில் பல பகுதியைத் தன் ஆட்சியின் கீழ் கொண்டு வந்தான். 'கச்சியும் தஞ்சையும் கொண்ட கன்னரதேவன்' என்று

பட்டமும் பூண்டான். மூன்றாம் கிருட்டினனுடைய கல்வெட்டுகள் செங்கற்பட்டு, தென்னாற்காடு, வடஆற்காடு ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. இவன் தஞ்சையைக் கைப்பற்றியதாகக் கூறுவது ஐயத்திற்கு இடமளிப்பதாக உள்ளது. மிகப்பெரிய வெற்றி கண்டு, சுமார் நாற்பதைந்து ஆண்டுகள் சோழர் உதவியைக் கோரினான். பராந்தகன் மதுரையைக் கைப்பற்றி பேரரசை ஆண்ட பரகேசரி பராந்தகன் இந்தத் தாக்குதலைச் சமாளிக்க வேண்டியதாயிற்று. தலைமகன் இறந்த பின்னர் பராந்தகன் அதிக நாள் வாழவில்லை.

பராந்தகன் காலத்தில் பல கோயில்கள் கட்டப்பெற்றன. பராந்தகனும் தில்லைச் சிற்றம்பலக் கோயிலுக்குப் பொன் வேய்ந்ததாக அறிகிறோம். அவன் காலத்தில்தான் உள்ளாட்சி தேர்தல் முறையை விரிவாகக் குறிக்கும். உத்தரமேரூர் சாசனம் கல்வெட்டில் பொறிக்கப்பட்டது.

பராந்தகன் இறந்த பிறகு, அவனது இரண்டாவது மகன் கண்டராதித்த தேவர் சோழ அரியணை ஏறினான். அவன் காலத்தில் தெற்கே பாண்டியர்கள் தொல்லை கொடுத்து வந்தனர். சோழப் பேரரசின் வடபகுதியான செங்கற்பட்டு, வடஆற்காடு, தென்ஆற்காடு ஆகிய மாவட்டங்களின் பெரும் பகுதி இராட்டிரகூட மன்னனின் கையிலேயே இருந்தது. இவற்றை மீட்பதற்குக் கண்டராதித்தன் போர் முரசு கொட்டினார். ஆனால் அவ்வளவு எளிதில் இப்பகுதிகளை மீட்க முடியவில்லை. இவருக்கு 'மேற்கெழுந்தருளின தேவர்' என்ற பெயர் காணப்படுகிறது. மேற்குத் திசையிலே சோழப்பேரரசை மீட்கும் செயலில் இவர் இறந்திருக்கக் கூடும் என்பதை இப்பெயர் செப்புகிறது. இவர் இறக்கும் பொழுது அவருடைய மதுராந்தகன் என்ற மகன் சிறுவனாக இருந்தான்.

அவன் செம்பியன் மாதேவியாரின் திருவயிற்றில் உதித்தவன். கண்டராதித்த சோழர் சிறந்த வீரர். ஆயினும் அவர் தில்லைப் பெருமானிடத்துச் சிறந்த பக்திகொண்டு விளங்கினார். தில்லைப் பெருமான் மீது திருவிசைப்பா பாடியுள்ளார். ஆதலின் அவரது சைவ நெறித்தொண்டு அவரது வீரத்துக்கும் மேம்பட்டு நின்றது. தன்னை தஞ்சை, உறையூர் இரண்டிற்கும் தலைவன் என்று திருவிசைப்பாவில் குறிக்கிறார். கண்டராதித்த தேவர் இறக்கும் போது, மதுராந்தகன் குழந்தையாக இருந்ததால் அவரின் இளவல் அரிஞ்சயன் அரியணை ஏறினான். இவனுக்கு 'அரிந்திகை' என்றும் 'அரிகுலகேசரி' என்றும் பெயர்கள் இருந்தன. இவனும் சோழ அரசின் வடபகுதியை மீட்கும் பணியில் ஆற்றூர் என்ற இடத்தில் இறந்தான். முதல் இராசராசன் மேல்பாடி என்ற இடத்தில் இவருக்கு ஒரு பள்ளிப்படையை எழுப்பி, அதை 'அரிந்திகை ஈச்வரம்' என்று பெயரிட்டான். ஆற்றூர் என்பது மேல்பாடியின் ஒரு பகுதியாக இருந்திருக்க வேண்டும். இவருக்கு 'ஆற்றூர்த் துஞ்சிய தேவர்' என்ற பெயர் காணப்படுகிறது.

அரிஞ்சய தேவர் இறக்கும் பொழுதும் கண்டராதித்தரின் மகன் மதுராந்தகன் சிறுவனாகவே இருந்தான். ஆதலின் அரிஞ்சய தேவருக்கு (வைதும்பக் குடியில் வந்த) கல்யாணி என்ற மாதேவியாரிடத்துப் பிறந்த சுந்தரசோழன் என்பவர் பட்டத்துக்கு வந்தார். இவருக்குப் பராந்தகன் என்ற பெயர் காணப்படுகிறது. சுந்தரசோழ பராந்தகன் பட்டத்துக்கு வந்ததும், பாண்டியனை அடக்கத் தென்திசை மீது படையெடுத்தார். அவருக்கு உதவியாக அவரது தலைமகன் ஆதித்த கரிகாலன் என்பவன் உறுதுணையாக நின்றான். அப்பொழுது பாண்டிய நாட்டில் வீரபாண்டியன் என்பவன் ஆண்டுவந்தான். சேவூர் என்ற இடத்தில் நடந்த போரில்

வீரபாண்டியன் தோற்றான். முதலில் மதுரைக் கைப்பற்றப் பெற்றது. சுந்தர சோழர் 'மதுரை கொண்ட இராசகேசரி' என்ற பட்டம் பூண்டார். ஆதித்தன் 'வீரபாண்டியன் தலைகொண்டான்' என்ற பெயர் கொண்டார். வீரபாண்டியனுக்கு உதவியாக வந்த ஈழத்துப் படையும் தோற்றோடியது. கொடும்பாளூர் சிறிய வேளார் ஈழத்தின் மீது படையெடுத்தார். சுந்தர சோழன் வடாற்காடு, தென்னாற்காடு, செங்கற்பட்டு மாவட்டங்களை இராட்டிரகூடர் வசமிருந்து மீட்டார். அவருடைய பெரு முயற்சியால் சோழப் பேரரசு மீண்டும் விரிவடைந்தது. காஞ்சியில் ஒரு மாளிகை எழுப்பப்பட்டது. வருத்தமென்பதே யாரும் கண்டறியா வகையில் சுந்தர சோழருடைய ஆட்சி மிகவும் சிறந்து திகழ்ந்தது. ஆதலின் மனுச் சக்ரவர்த்தியே உலகில் மீண்டும் தோன்றியுள்ளார் என்று அவரைப் போற்றிப் பரவினர். சுந்தர சோழ தேவருக்கு ஆதித்த கரிகாலன் என்ற ஒரு மகன் இருந்தான் என்று கண்டோம். அவருடைய இரண்டாவது மைந்தனே சோழப் பேரரசர்களில் தலைசிறந்தவனும், ஒப்பற்ற தமிழ்த் தொண்டும், கலைத்தொண்டும், சமயத்தொண்டும், அரசியல் தொண்டும் புரிந்த மாமேதை அருண்மொழி என்று பெயர் பெற்ற முதலாம் இராசராச சோழனாவான். முதல் இராசராச சோழனுடைய பெரிய லெயிடன் செப்புப் பட்டயத்தில் சுந்தர சோழனைப் பற்றி உள்ள கீழ்க்கண்ட செய்யுள் குறிப்பிடத் தகுந்தது:

'அரிஞ்சயாத் அஜனி புராந்தக உபம:
பராந்தக: பரந்ருப சக்ர மர்த்தன:
அபாலயத் ஜலநிதி மேகலாம் மஹிம்
சுகேனய: நிஜகுண ரஞ்சித ப்ரஜ:'

**பொருள்:** புரமெரித்தோராகிய சிவபிரானுக்கொப்ப வீரதவ முடையவனும் மாற்றரசர்களின் ஆணையைத் திகளடித்தவனும்

ஆன பராந்தகன் அரிஞ்சயனிடத்திலிருந்து தோன்றினான். தன்னுடைய குணத்தினால் மக்களை மகிழ்வித்த அம்மன்னன், கடலாகிய மேகலை பூண்ட இவ்வுலகைச் சுகமாக ஆண்டான்.

கரிகால அன்ய நாமானம் ஆதித்யம் உதபீதத்
ராஜராஜம் ச ராஜேந்த்ர: ரவிவம்ஸ சிகாமணிம்

பொருள்: கரிகாலன் என்று மற்றொரு பெயர் கொண்ட ஆதித்தனை மகனாகப் பெற்றெடுத்தான். திங்கள் குலத்தின் தலைசிறந்தோனான இராசராசனையும் மகனாகப் பெற்றான்.

சுந்தரசோழன் முடிசூடியவுடன் ஆதித்த சோழனையும் இளங்கோவாக முடிசூட்டினான். கண்டராதித்த தேவரின் மகனாகிய மதுராந்தகன் பெரியவனாக வளர்ந்திருந்தான். சோழர் அரியணை முறைப்படி தனக்குக் கிடைக்கவேண்டுமென்ற ஆவலும், ஆட்சியைத் தானே ஆளவேண்டுமென்ற ஆவலும் அவனுக்கு ஏற்பட்டிருக்கக் கூடும். சுந்தரசோழ தேவரின் ஆட்சியின் முடிவில் ஆதித்த கரிகாலன் சூழ்ச்சியால் கொல்லப்பட்டான். வீரநாராயணபுரத்தைச் சேர்ந்த சிலர் இக்கொலைக்குக் காரணமாக இருந்தார்கள் என்று உடையார்குடி என்ற இடத்தில் கிடைத்த கல்வெட்டிலிருந்து அறிகிறோம். தலைமகன் இறந்ததால் மனமுடைந்து சுந்தரசோழர் காஞ்சியில் பொன் மாளிகையில் இறந்தார். அவருக்குப் 'பொன் மாளிகைத் துஞ்சிய தேவர்' என்ற பெயரும் உண்டாயிற்று. அவருடன் அவருடைய பிராட்டியார் வானவன் மாதேவியாரின் திருவயிற்றில் குந்தவையும், அருண்மொழியும் தோன்றினர். சுந்த, சோழ தேவருக்குச் சேர குலப் பெண்மணியும் தேவியாக இருந்தார் என்று அறிகிறோம். இதுகாறும் கிடைத்துள்ள சோழர் செப்பேடுகளில் சுந்தரசோழர் காலத்தில் அளிக்கப்பட்ட அன்பில் செப்பேடுகள்தான்

மிகவும் தொன்மையானது. இவர் காலத்தில் வீரசோழியத்திற்கு உரையொன்று எழுதப்பட்டது. அதில் சுந்தர சோழருடைய பெருமை சிறப்பாகக் குறிக்கப்பட்டுள்ளது.

"மேதகு நந்திபுரி மன்னர் சுந்தரச்
சோழர் வண்மையும் வனப்பும்
திண்மையும் உலகில் சிறந்து வாழ்கெனவே."

சுந்தரசோழரைப் பற்றி வீரசோழிய உரையில் காணப்படும் கீழ்வரும் பாடலும் குறிப்பிடத் தகுந்தது :

"இந்திர னேறக் கரியளித் தார்பரி யேழளித்தார்
செந்திரு மேனித் தினகரற் குச்சிவ னார்மணத்துப்
பைந்துகி லேறப் பல்லக் களித்தார் பழை யாறைநகர்ச்
சுந்தரச் சோழரை யாவரொப் பார்களித் தொன்னிலத்தே"

சுந்தரசோழனுக்குப் பிறகு கண்டராதித்தன் மகன் மதுராந்தகன், உத்தமசோழன் என்ற பெயரில் சோழ அரியணை ஏறினான். இவனுடைய தாய் செம்பியன் மாதேவியார் சைவ சமயத்திற்குச் செய்த தொண்டு பொன்னேட்டில் பொறித்து வைக்கத்தகும். ஏராளமான கற்கோயில்களை எழுப்பிப் பொன்னாலும், வெள்ளியாலும், செம்பாலுமான அணிகலன்களையும், பரிகலங்களையும், படிமங்களையும் ஆலயங்களுக்கு அளித்துச் சைவம் தழைக்கச் செய்த அம்மையார் அவர். கல்வெட்டுகளில் 'உத்தமசோழரைத் திருவயிறு வாய்த்த செம்பியன்மாதேவியார்' என்று சிறக்கக் குறிக்கப்படுபவர். அச்சைவ மூதாட்டியின் மைந்தன் ஆதலின், 'உத்தமசோழன் தன் பொருளனைத்தையும் சிவபிரானுக்குக் கோயில் எழுப்புவதில் செலவழித்தான். தன் மக்கள் சிவபிரானுக்கு விழா எடுக்க வகைசெய்தான்' என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகிறது.

உத்தமசோழனுடைய ஆட்சியில் அளிக்கப்பட்ட ஒரு செப்பேடு இப்போது இருக்கிறது. சோழ மன்னர்களால் அச்சிடப்பட்ட காசுகளில் இதுவரை கிடைத்துள்ளவற்றில் இவன் காலத்தில் வெளியிட்டவையே மிகவும் தொன்மையானவை. இவனுக்கு விக்கிரம சோழன் என்ற ஒரு பட்டப்பெயரும் இருந்ததாக அறிகிறோம். உத்தமசோழனுக்கு ஐந்து தேவியர் இருந்ததாகத் தெரிகிறது.

# இராசராசன் தோற்றம்

அழகிலும் அறிவிலும் ஆற்றலிலும் சிறந்து விளங்கிய மதுரை கொண்ட இராசகேசரி என்று பட்டம் பூண்ட சுந்தரசோழனுக்கும், வானவன் மாதேவிக்கும் பிறந்த இரண்டாம் திருக்குமரனே அருண்மொழி. வானவன் மாதேவியாரைப் பற்றித் திருக்கோவலூரில் உள்ள ஒரு கல்வெட்டு:

'செந்திரு மடந்தைமன் சீராச ரரசன்
இந்திர சமானன் இராச சர்வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான்'

என்று குறிக்கிறது.

வானவன் மாதேவியார் மலையமான் அரசர்களுடைய குடிப்பிறந்தவர். தந்தை வழியில் தமிழகத்தை ஆண்ட மூவேந்தர்களில் ஒருவரான செம்பியர் குடியையும், தாய் வழியில் சங்க காலத்திலிருந்தே திருமுடிக்காரி போன்ற பெருந்தகைகள் பிறந்த மலையமான் குடியையும், சேர்ந்தவன் அருண்மொழி, இவன் எந்த ஆண்டு பிறந்தான் என்று நிச்சயமாகக் கூற முடியாது. ஆனால் ஐப்பசித் திங்கள் சதயநாளில் தோன்றினான் என்பது தெளிவு. திருநந்திக்கரை என்ற இடத்திலுள்ள கல்வெட்டு தான் பிறந்த ஐப்பசித் திங்கள் திருச்சதய நாளன்று ஆண்டவனுக்குச் சிறந்த விழாக் கொண்டாட வழி வகுத்தான் என்று கூறுகிறது. சேர நாட்டை இவன் வெற்றி கொண்ட போது அங்குச் சதய நாளில் திருவிழாக் கொண்டாட வைத்தான் என்பதைக் கலிங்கத்துப் பரணி:

"சதையநாள் விழா உதியர் மண்டலம்
தன்னில் வைத்தவன்"

என்று கூறுவது இதை உறுதிப்படுத்துகிறது.

சுந்தரசோழற்கு அருண்மொழி தோன்றினான். அழகாகிய அணங்கு இவன் உடல் அங்கங்களை அணைந்தாள். அத்திருமகளை நீண்ட தன் இருகரங்களால் தாங்கினான். அக்கரங்களில் சங்கமும் சக்கரமும் ரேகை உருவில் திகழ்ந்தன. 'இது திருமாலின் மறு தோற்றமாகவே திகழ்ந்தது' என்று திருவாலங்காட்டுச் செப்பேட்டிலுள்ள ஒரு செய்யுள் குறிக்கிறது:

அஜனி புஜயுகனே பிராஸதீர்கேன தீப்தச்ரியம்
அகில சரீர ஆஸ்லேஷினீம் ஆததான:
அதிகரமத ரேகாரூபிணௌ சங்க சக்ரௌ
ததத் அருண்மொழி வர்மா தஸ்ய சூனு: முராரி:

சுந்தரசோழனுடைய மகனே திருமால் என்பதாக இச்செய்யுள் முடிகிறது. திருமாலோடு அருண்மொழிவர்மன் ஒப்பிடப்படுவது வழிவழி வந்த வழக்கம்.*

அவன் தோன்றியதும் இரண்டு பக்கங்களிலும் பெரிய தூய்மையான ஒளி, பெரும் மண்டலமாகத் தோன்றியது. அந்த ஒப்பற்ற நிலவைக் கண்டவுடன் மக்களுடைய கண்களெல்லாம் மலர்ந்தன. இது ஓர் அபூர்வமான சந்திரன் என மக்கள் நினைத்தனர்

---

* கூற்றொத்தீயே, மாற்றரும் சீற்றம்;
வலியொத்தீயே, வால்யோனை;
புகழொத்தீயே, இகழுநர் அடுநனை:
முருகொத்தீயே, எண்ணியது முடித்தலினி.
என்ற சங்கச் செய்யுற் இங்கு நினைவிற் கொள்ளல் தகும்

என்று அடுத்த செய்யுள் கூறுகிறது. இச்செய்யுளில் ஆங்காங்கே சிலேடையாக இருபொருள் தோன்றும்படி புலவர் சொற்களைக் கையாண்டிருக்கிறார். சந்திரனுக்கு இருண்ட பக்கம் என்றும், ஒளிவீசும் பக்கம் என்றும் இருபக்கங்கள் உண்டு. ஒன்று ஒளி மயமானது. மற்றது இருள் மயமானது. ஒன்றை பூர்வ பக்கம் என்றும் மற்றதை அபரபக்கம் என்றும் வடமொழியில் கூறுவர். ஆனால் அருண்மொழியாகிய நிலவு இரு பக்கங்களிலும் (தாய்வழி, தந்தைவழி, சிறந்த ஒளி மயமானது. ஆதலின் விண்ணிலே தோன்றும் நிலவைக் காட்டிலும் மிகவும் சிறந்தது. அது உதித்தவுடன் அதைச்சுற்றிலும் பெரிய ஒளி மண்டலம் தோன்றியது. அருண்மொழியால் சோழப் பேரரசு பெரிய மண்டலமாக, பெரும் பேரரசாக, ஒளி விட்டுத் திகழ்ந்தது. ஆதலின் இந்நிலவுக்கு ஈடே இல்லை. இதற்குமுன் இதுபோன்ற ஒரு தோற்றம் ஏற்படவில்லை (அபூர்வமானது) என்று இச்செய்யுள் நயம்பட உரைக்கிறது.

'உபய பஷ விசுத்தம் அஹோ
ஒஜஸீ பிரதித மண்டல தாரிணி சர்வதா
தனுப்ருதாம் நயநாநி சிராய தத் வபு:
அபூர்வ ஹிமத்யுதி ரேமிரே'

என்பதே அச்செய்யுள். மன்னனுடைய புகழை வெண்ணிலவுக்கு உவமித்துப் பாடுவது பண்டைய இலக்கிய மரபு.

மாபெரும் சக்கரவர்த்தி தோன்றிவிட்டான். இனி ஆதிசேடனாகிய நம் கணவரின் (இவ்வுலகைத் தாங்கும்) பாரத்தை இவன் இனி விரைவில் தாங்குவான் என்று நாகப் பெண்மணிகளெல்லாம் (ஆதிசேடனின் மனைவியர்) மகிழ்ச்சியால் நாட்டியம் ஆடினர் என்று அடுத்த செய்யுள் குறிக்கிறது.

'பர்த்ரு பூபரம் அஸௌ விணேஷ்யதி
ப்ராயஸ: ந இதி நாகயோஷித:
குர்வதே ஸ்ம பரிநர்த்தனம் ததா
ஜன்ம லப்தவதி சக்ரவர்த்தினி'

இவன் பிறக்கும் பொழுதே சக்கரவர்த்திக்குரிய லக்ஷணங்களோடு திகழ்ந்தான் என்பது பொருள்.

அருண்மொழிவர்மன் பிறந்தபொழுதே மிகவும் அழகாக இருந்தான். பேரரசனுக்குரிய இலக்கணங்கள் யாவும் அவனிடம் சிறந்து விளங்கின. அவன் பிறப்பால் சோழ நாடே பெருமகிழ்ச்சியடைந்தது என்று இச்செய்யுட்களிலிருந்து நாம் அறிகின்றோம்.

அருண்மொழி சிறுகை நீட்டி, அம்புலி அழைத்து, சிற்றில் அழித்து, வளர்ந்து, வாளேந்தி, பரியும் ஊர்ந்து, பல கல்வியும், கலையும் பெற்றுச் சிறந்த வீரனாக வளர்ந்ததைப் புலவர்கள் பாடியிருக்கத்தான் வேண்டும். குலோத்துங்க சோழனின் குழவிப் பருவத்தை சயங்கொண்டார் கலிங்கத்துப் பரணியில் பாடவில்லையா? அருண்மொழியைப் பாடிய பாடல்கள் நமக்குக் கிடைக்கவில்லை என்றுதான் கொள்ளவேண்டும். ஒருக்கால் இராசராசேச்வர நாடகம் என்று ஒரு நூல் இருந்து மறைந்ததல்லவா? அதில் இவனுடைய தோற்றமும், வளர்ச்சியும் பாடப்பெற்று அது மறையவே, இதுவும் மறைந்ததோ! அறியோம். ஆயினும் சோழ நாடே பெரு மகிழ்ச்சியுற்றது எனில் அருண்மொழியின் தாயும் தந்தையுமான சுந்தர சோழனும் வானவன் மாதேவியாரும் எவ்வளவு இன்பத்தைப் பெற்றிருக்க வேண்டும்!

அருண்மொழி இளைஞனாக இருக்கும்பொழுதே சுந்தரசோழன் இறந்திருக்க வேண்டும். சுந்தர சோழன் இறந்தவுடன் வானவன் மாதேவியாரும் உடன்கட்டை ஏறினார் என்று கண்டோம். இதைத் திருக்கோவலூர்க் கல்வெட்டு விரிவாகக் குறிக்கிறது:

"செந்திரு மடந்தைமன் சீராச ராசன்
இந்திர சமானன் இராச சர்வஞ்ஞனெனும்
புலியைப் பயந்த பொன்மான்; கலியைக்
கரந்து கரவாக் காரிகை; சுரந்த
முலைமகப் பிரிந்து முழங்கெரி நடுவணும்
தலைமகற் பிரியாத் தையல்; நிலைபெறுந்
தூண்டா விளக்கு . . . . . . . . .
. . . . . . . . . . . . மணிமுடி வளவன்
சுந்தர சோழன் மந்தரதாரன்
திருப்புய முயங்குந் தேவி"

வானவன் மாதேவியாரின் அருஞ்செயல் இதனால் தெற்றென வெளிப்படுகிறது. சுந்தரசோழனுடைய மறைவையும், வானவன் மாதேவியாரின் மறைவையும் திருவாலங்காட்டு செப்பேடு அழகாக எடுத்துக் கூறுகிறது. அரக்கர்களால் தேவர்களுக்கு ஏற்பட்ட துயரைத் துடைக்க சுந்தர சோழன் விண்ணுலகெய்தினான் என்று ௬ . செய்யுள் குறிக்கிறது. 'எனது கணவர் சுந்தரர் அழகு மிக்கவர். ஆதலின் தேவப்பெண்களெல்லாம் அவரை அபகரித்து விடுவர். அதற்கு நான் உடன்படேன்' என்று கூறி வானவன் மாதேவியார் தன் உற்றார் உறவினரையும், மக்களையும் விட்டுப் பிரிந்து கணவரோடு விண்ணுலகடைந்தார் என்றும், வீரராகிய தன் கணவன் மரிக்க அப்சரசப் பெண்களெல்லாம் அவரை அங்கே அணைந்து விடுவார்களோ என்று பயந்து அவர் அருகிலேயே

எப்பொழுதும் இருக்க உடன் சென்றாள் என்றும் திருவாலங்காட்டுச் செப்பேட்டுச் செய்யுட்கள் குறிக்கின்றன.

அருண்மொழியின் தோற்றத்தில் ஆனந்தமடைந்த இன்னும் இருவர்களை இங்கு குறிப்பிடத்தான் வேண்டும். கண்டராதித்த தேவரின் பிராட்டியார் செம்பியன் மாதேவியார் அருண்மொழி வர்மனிடத்தில் பேரன்பு உடையவர். அருண்மொழி குழந்தையாக இருந்தபோது, அவனைத் தாலாட்டிச் சீராட்டி அருள் வழியாம் சிவநெறியை அம்மூதாட்டியார் புகட்டியிருக்கவேண்டும். இராசராசனுக்கு சைவநெறியிலே இருந்த ஈடுபாட்டுக்கு இவ்வம்மையாரே சிறந்த காரணமாக இருந்திருக்கவேண்டும். செம்பியன் மாதேவியாரைப் போன்று அருண்மொழியிடத்தில் அன்போடு திகழ்ந்தவர் அவருடைய தமக்கை குந்தவை பிராட்டியார். இவர் அருண்மொழிக்கு முன் பிறந்தவர். அருண்மொழியை ஒரு பேரரசனாக வளர்த்த பெருமை இவ்வம்மையாருக்கும் உண்டு.

தாயும் தந்தையும் இறந்த பின்னர் அன்போடு வளர்த்த குந்தவையின் மீது அருண்மொழிக்கு மிகப்பெரும் மதிப்பு இருந்தது என்று அவனது கல்வெட்டிலிருந்து அறிகிறோம்.

சுந்தர சோழனின் மறைவுக்குப் பிறகு ஆதித்த கரிகாலன் ஆண்டதாகத் திருவாலங்காட்டுச் செப்பேடு, பெரிய லெயிடன் செப்பேடு முதலிய சாசனங்கள் குறிக்கின்றன, ஆனால் கரிகாலன் சுந்தர சோழனுடைய காலத்திலேயே கொலையுண்டிருக்க வேண்டுமென்று சிலர் கருதுகின்றனர். இந்நிகழ்ச்சி சுந்தர சோழனுடைய கடைசிக் காலத்தில் நிகழ்ந்திருக்கலாம் என்றும் வரலாற்றாசிரியர்கள் கருதுகின்றனர். ஆதித்த சோழன் இறந்தவுடன் ‘‘மக்கள் அனைவரும் சோழப் பேரரசை ஏற்று ஆளும்படி

அருண்மொழியை வேண்டினர். அது சமயம் மதுராந்தக உத்தமசோழருக்கு, தானே ஆளவேண்டுமென்ற ஆவல் இருந்தது. அரசியல் கலையிலே நல்ல தேர்ச்சி பெற்றிருந்த அருண்மொழி தன் சிறிய தந்தையின் ஆவலை நன்குணர்ந்து சோழநாட்டை அவரே ஆள வேண்டுமென்று வற்புறுத்தினான். அவருள்ளவரை சோழர் முடியைத் தான் மனத்தாலும் நினையேன் என்றும் கூறினான் எனத் திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கிறது.

ப்ரபல கலிபல அங்க துவாந்த வித்வம்ஸ ஹேதோ:
ஸ்வயம் அருண்மொழி வர்மா ப்ரார்த்ய மாண: ப்ரஜாபி:
அசகமத ந ராஜ்யம் ஸ்வே பித்ருவியே ஸ்வதேச
ப்ரணயினி மனஸாபி க்ஷத்ர தர்மார்த்த வேதி.

என்பது அச்செய்யுள். இச்செய்யுளிலிருந்து இரண்டு செய்திகள் நன்கு விளங்குகின்றன. முதலாவது உத்தம சோழருக்குத் தான் ஆள வேண்டுமென்ற ஆவல் இருந்தது என்பது. இரண்டாவது அருண்மொழி அரசியல் அறிவில் முதிர்ந்திருந்தான் என்பதும் நாட்டின் நன்மைக்காகவும் சோழர்குலத்தின் பெருமையைக் காக்கவும் ஒரு மாபெரும் பேரரசின் முடியையும் விட்டுக்கொடுக்கும் தியாகியாக விளங்கினான் என்பதும் வெளிப்படை. தன்னலங் கருதாத் தன்மையாளனாக இவன் விளங்கினான்.

மதுராந்தக உத்தம சோழன் சுமார் பதினைந்து ஆண்டுகள் ஆட்சி புரிந்தான். அவன் அருண்மொழியை இளவரசனாக முடிசூட்டி மகிழ்ந்தான். அப்பதினைந்து ஆண்டுகளில் தன்னுடைய கல்வியறிவையும், கலையார்வத்தையம், அரசியல் ஆற்றலையும் நன்கு பெருக்கிக் கொண்டு ஓர் ஒப்பற்ற பண்பாளனாக மலரும் வாய்ப்பு அவனுக்கு ஏற்பட்டது. மதுராந்தக சோழன் கி.பி.985-ல் இறந்தவுடன் அருண்மொழிவர்மன் சோழ அரியணை ஏறினான்.

அந்நாளை மாபெரும் விழாவாக மக்கள் கொண்டாடியிருக்க வேண்டும். அருண்மொழியுடைய முடிசூட்டு விழாவின்போது நாடெல்லாம், நகரெல்லாம் ஒரே களிப்பில் மூழ்கி விழாக்கோலம் பூண்டிருக்க வேண்டும். ஆடலும் பாடலும், ஆலய வழிபாடுகளும் நிரம்பி எங்கும் களிப்பு மிகுந்து விளங்கியிருக்க வேண்டும்.

இவன் முடியில் ஆட்டப் பெற்ற விழுநீர் கலியின் மாசுகளைத் துடைத்தது. தன் மகளாகிய திருமகள் இவன் மார்பில் வீற்றிருத்தலைக் காணத் தானே வந்த பாற்கடல்போல் இவனுடைய வெண்கொற்றக் குடை திகழ்ந்தது என்று திருவாலங்காட்டுச் செப்பேடு குறிக்கிறது. அருண்மொழிவர்மன் தன் முடிசூட்டு விழாவின் போது இராசராசன் என்ற பெயரை ஏற்றிருக்க வேண்டும். இவன் முடிசூடியவுடன் திருமகள் போலப் பெருநிலச் செல்வியையுந் தனக்கே உரிமை பூண்டான்.

இராசராசன் பல பெயர்களைப் பூண்டிருந்தான். அவை:

| | |
|---|---|
| அருண் மொழி | அபயகுலசேகரன் |
| அரிதுர்க்கலங்கன் | அழகிய சோழன் |
| இரணமுக பீமன் | இரவிகுல மாணிக்கன் |
| இரவிவம்ச சிகாமணி | இராசராசன் |
| இராசசர்வஞ்ஞன் | இராசாச்ரயன் |
| இராச கண்டியன் | இராச மார்த்தாண்டன் |
| இராசேந்திர சிம்மன் | இராச விநோதன் |
| உத்தம சோழன் | கேரளாந்தகன் |
| சத்ரு புசங்கன் | சண்டபராக்ரமன் |
| சிங்களாந்தகன் | சிவபாத சேகரன் |
| சோழ மார்த்தாண்டன் | சோழகுல சுந்தரன் |
| சோழேந்திரசிம்மன் | திருமுறை கண்ட சோழன் |
| தெலிங்ககுலகாலன் | நிகரிலி சோழன் |

| | |
|---|---|
| நித்ய விநோதன் | பண்டித சோழன் |
| பாண்டிய குலாசனி | பெரிய பெருமாள் |
| மும்முடிச் சோழன் | மூர்த்தவிக்ரமாபரணன் |
| சனநாதன் | செயங்கொண்ட சோழன் |
| சத்திரிய சிகாமணி | |

இவனுக்கு கோசராசகேசரி என்றும், கோராசராசகேசரி என்றும் பட்டங்கள் கல்வெட்டுகளில் காணப்படுகின்றன.

இராசராசனுக்குப் பல மனைவியர் இருந்தனர்.

| | |
|---|---|
| ஒலோக மாதேவி | சோழ மாதேவி |
| த்ரைலோக்ய மாதேவி | பஞ்சவன் மாதேவி |
| அபிமான வல்லி | பிருத்வி மாதேவி |
| மீனவன் மாதேவி | இலாட மாதேவி |
| வில்லவன் மாதேவி | வானவன் மாதேவி |
| வீர நாராயணி | |

என்பவராவர். இவர்களில் ஒலோக மாதேவி இராசராசனின் பட்டத்தரசியாகத் திகழ்ந்தார். இவ்வம்மையாருக்குத் தந்தி சக்திவிடங்கி என்ற இயற்பெயரும் இருந்தது. இராசராசனுக்கு மகன் ஒருவனே இருந்ததாகத் தெரிகிறது. அவனே வானவன் மாதேவியாரிடத்துப் பிறந்த மதுராந்தகன் என்ற முதல் இராசேந்திர சோழனாவான். இரண்டு பெண்கள் இருந்தனர். ஒருத்தி பெயர் மாதேவடிகள். இளையவள் பெயர் குந்தவை. இராசராசன் தன் தமக்கையாரிடமிருந்த அன்பின் காரணமாகத் தன் இளைய மகளுக்குக் குந்தவை என்ற பெயர் சூட்டி மகிழ்ந்தான். இராசராசனுடைய மனைவியரில் பஞ்சவன் மாதேவி பழுவேட்டரையர் குடியில் வந்தவள். இராசராசனுடைய தமக்கையார் குந்தவை, வல்லவரையர் வந்தியத் தேவர் என்பவரை மணந்தார்.

# இராசராசன் வெற்றிகள்

"திருமகள் போலப் பெருநிலச் செல்வியுந்
தனக்கே யுரிமை பூண்டமை மனக்கொளக்
காந்தளூர்ச் சாலை கலமறுத் தருளி
வேங்கை நாடுங் கங்க பாடியும்
நுளம்ப பாடியுங் குடமலை நாடுங்
கொல்லமுங் கலிங்கமும்
எண்டிசை புகழ்தர ஈழமண்டலமும்
இரட்ட பாடி ஏழரை இலக்கமும்
திண்டிறல் வென்றித் தண்டாற் கொண்ட
தன்னெழில் வளரூழியுள்
எல்லா யாண்டும் தொழுதக விளங்கும்
யாண்டேய் செழியரைத் தேசுகொள்
கோராசகேசரிவர்மரான
ஸ்ரீராசராச தேவர்"

என்ற மெய்க்கீர்த்தி இவனுடைய பெரும்பாலான கல்வெட்டுக்களில் காணப்படுகிறது. இம்மெய்க்கீர்த்தியிலிருந்து இராசராசன் அடைந்த போர் வெற்றிகள் அனைத்தும் அறியலாம்.

## சாலைக் கலமறுத்தருளியது

இராசராசன் பெற்ற வெற்றிகளில் காந்தளூர்ச் சாலையில் கலமறுத்தருளியது முதன்மையாகக் கூறப்படுகிறது. காந்தளூர்ச் சாலை என்பது திருவனந்தபுரத்தின் ஒரு பகுதியாக இப்பொழுது

இருக்கிறது. காந்தளூர்ச் சாலைக் கலமறுத்தருளி என்பதற்கு அறிஞர்கள் பல பொருள் கூறுகின்றனர். பெரும்பாலானவர்கள் இங்குச் சேர மன்னனுடைய பெரும்கப்பற்படை இருந்தது என்றும், அங்குள்ள மரக்கலங்களை அழித்து இராசராசன் சேர மன்னனுடைய பலத்தை ஒடுக்கினான் என்றும் கூறுவர். காந்தளூர்ச் சாலை என்பது ஒரு படைக் கருவூலமாக இருந்திருக்கவேண்டும். அரும்படைக்கலங்கள் பலப்பல நிரம்பிக் கிடந்த அச்சாலையில் உள்ள படைக்கலங்களை அழித்தான் எனக் கொள்வதே பொருத்தமாக இருக்கும். அப்பொழுது சேர நாட்டை ஆண்டவன் பாஸ்கர ரவிவர்மன் ஆவான். அவன் சிறந்த புகழாளனாகத் திகழ்ந்திருக்க வேண்டும். தான் சேர மன்னனிடம் அனுப்பிய ஒரு தூதுவனை அவமானப்படுத்தியதால் வெகுண்டெழுந்து அவன் மீது பாய்ந்தான் என்பதை,

"தூதற்காப்

பண்டுபக லொன்றில் ஈரொன்பது சுரமுங்

கொண்டு மலைநாடு கொண்டோன்"

என்று விக்கிரம சோழன் உலாவும்;

"சூழவும்

ஏறிப் பகலொன்றில் எச்சுரதும் போயுதகை

நூறித்தன் றூதனை நோக்கினோன்"

என்று குலோத்துங்கச் சோழன் உலாவும் குறிக்கின்றன.

மதகயத்தால் ஈரொன்பது சுரமு மட்டித்

துதகையைத் தீத்த வுரவோன்.

என்று இராசராசன் உலாவிலும் இந்நிகழ்ச்சி குறிப்பிடப்படுகிறது.

கலிங்கத்துப்பரணி இந்நிகழ்ச்சியை,

"சதய நாள்விழா உதியர் மண்டலந்
தன்னில் வைத்தவன் தனியோர் மாவின்மேல்
உதய பானுவொத் துதகை வென்ற கோன்
ஒருகை வாரணம் பலகவர்ந்ததும்"

என்று குறிப்பிடப்படுகிறது.

சேர நாட்டை இராசராசன் வெற்றி கண்டதற்கு அறிகுறியாக அவனுடைய கல்வெட்டுகள் அங்கு காணப்படுகின்றன. தன் தூதனுக்கு ஏற்பட்ட அவமானத்தைத் தடுக்க ஒரே பகலில் பதினெட்டுச் சுரங்களைக் கடந்து மலைநாட்டைக் கொண்டான் என்று கூறப்படுவதிலிருந்து இராசராசனது படை மிக விரைவாக முன்னேறிச் சேரநாட்டை எளிதில் பிடித்தது என்று கொள்ளலாம்.

'சாரல் மலையட்டுஞ் சேரன் மலைஞாட்டுத்
தாவடிக் குவட்டின் பாவடிச் சுவட்டுத்
தொடர்நெய்க் கனகம் துகளெழ நெடுநற்
கோபுரங் கோவை குலைய மாபெரும்
புரிசை வட்டம் பொடிபடப் புரிசைத்
சுதைகவின் படைத்த சூளிகை மாளிகை
உதைகை முன் னொள்ளெரி கொளுவி
உதைகை வேந்தைக் கடல்புக வெகுண்டு'

என்று திருக்கோவலூரிலுள்ள முதல் இராசராசசோழன் காலத்துக் கல்வெட்டு உதகை வெற்றியைப் பாடுகிறது.

## வேங்கை நாட்டை வெற்றி கொண்டது

வேங்கை நாடு என்று குறிக்கப்படுவது வேங்கி நாடு என்னும் கீழைச் சாளுக்கியர்களுடைய நாடாகும். இந்நாடு சோழப் பேரரசின்

வடபுறத்தில், கீழைக் கடற்கரை ஓரத்தில் உள்ள பகுதியாம். இந்நாட்டை கி.பி. ஏழாம் நூற்றாண்டிலிருந்து கீழைச் சாளுக்கிய மன்னர்கள் ஆண்டுவந்தனர். இரண்டாம் புலிகேசியின் தம்பி குப்ச விட்ணுவர்த்தனன் என்பவனால் அவர்கள் குடி நிறுவப்பட்டது. முன்னூறு ஆண்டுகளுக்கு மேல் சீரும் சிறப்புமாக ஆண்ட கீழைச் சாளுக்கியர் குடி, இராசராசன் முடி சூடியபோது கலக்கமுற்றிருந்தது. அப்பகுதியைத் தானார்னவன் என்ற மன்னன் அப்பொழுது ஆண்டு வந்தான். தானார்னவனுக்குச் சக்திவர்மன், விமலாதித்தன் என்று இரு மக்கள் இருந்தனர். சடாசோடபீமன் என்ற ஒரு குறுநில மன்னன், தானார்னவனைக் கொன்று வேங்கி மண்டலத்தைக் கைப்பற்றினான். தானார்னவனின் மக்கள் கலிங்கத்தில் தஞ்சம் புகுந்தனர். சடாசோடபீமன் விரைவில் கலிங்கத்தையும் கைப்பற்றினான். தானார்னவனின் மக்களாகிய சக்திவர்மனும், விமலாதித்தனும் சோழநாட்டில் தஞ்சம் புகுந்தனர்.

சோழ நாட்டின் வடபகுதியில் நிலவிய இந்நிகழ்ச்சிகளால் சோழப் பேரரசுக்குத் தீங்கு விளையக்கூடுமென்று இராசராசன் உணர்ந்தான். சக்திவர்மனையும், விமலாதித்தனையும் அன்போடு வரவேற்றுத் தன் அருகில் அமர்த்திக் கொண்டான். வேங்கி மீது படையெடுத்து கி. பி. 999-இல் வெற்றி கண்டு சக்திவர்மனை வேங்கி அரசனாக முடிசூட்டினான். ஓரிரு ஆண்டுகளில் வேங்கிநாடு முழுவதையும் இராசராசனுடைய படைகள் கைப்பற்றி, சக்திவர்மனின் ஆட்சியை நிலை நிறுத்தின.

வேங்கி நாட்டின் பலத்தைப் பெருக்கி அதைத் தன்கீழ் வைத்திருப்பதால் சோழப் பேரரசுக்குப் பெரும் நன்மை ஏற்படும் என்று கருதி, இராசராசன் தன் இளைய மகள் குந்தவையை விமலாதித்தனுக்கு மணம் செய்து கொடுத்தான்.

விமலாதித்தனுக்கும் குந்தவைக்கும் பிறந்த மகவுக்கு இராசராசன் என்றே பெயரிட்டனர். இதிலிருந்து வேங்கி நாடு சுமார் நூறு ஆண்டுகளுக்கு மேல் சோழ ஆட்சியின் நிழலில் விளங்கி வந்தது. விமலாதித்தனுக்குக் குந்தவையிடம் தோன்றிய இராசராசனின் மகனே, பின்னர் சோழர் அரியணை ஏறிய முதற்குலோத்துங்கச் சோழனாவான். சக்திவர்மன் சுமார் பன்னிரண்டு ஆண்டுகள் ஆண்டபிறகு, விமலாதித்தன் வேங்கியின் மன்னன் ஆனான்.

## கங்கபாடி வெற்றி

மைசூர்ப் பகுதியை ஆண்ட கங்கர்கள் இராட்டிரகூட மன்னர்களின் சிற்றரசர்களாகத் திகழ்ந்தார்கள். அவர்களுடைய பலத்தினால் இராட்டிரகூட மன்னர்கள் சோழப் பேரரசின் வடபகுதியைத் தங்கள் ஆளுகைக்கு உட்படுத்தியிருந்தார்கள் என்று முன்னர் கூறினோம். எனவே கங்கர்களின் வலியை அடக்குவது இன்றியமையாதது என்று கண்ட இராசராசன் கங்கபாடியின் மீது படையெடுத்து அதைக் கைப்பற்றினான். கங்கபாடி முழுவதும் சோழர் ஆட்சியிலிணைந்தது. இதிலிருந்து சுமார் நூறாண்டுகள் வரை கங்கர்கள் சோழர்களுடைய சிற்றரசர்களாக வாழ்ந்தனர்.

## நுளம்பபாடியும் தடிகைபாடியும் கொண்டமை

பெங்களூர், பெல்லாரி மாவட்டம், சேலம் மாவட்டத்தின் வடபகுதி, வடஆற்காடு மாவட்டத்தின் ஒருபகுதி ஆகிய நிலப்பரப்பை நுளம்பர்கள் அக்காலத்தில் ஆண்டு வந்தனர். அவர்கள் கங்க அரசர்களின் சிற்றரசர்களாகத் திகழ்ந்தனர். கங்கர்களும் நுளம்பர்களும் இராட்டிரகூடர்களிடம் தொடர்பு கொண்டிருந்ததால் அவர்களுடைய நாட்டைக் கைப்பற்ற வேண்டியது அவசியமாயிற்று.

எனவே நுளம்பபாடியும் இராசராசன் வசமாயிற்று. நுளம்பபாடியும் கங்கபாடியும் கொண்ட பொழுது தடிகை வழி என்ற தடிகைபாடியும் இராசராசன் கைப்பற்றினான். இவையனைத்தும் மைசூரைச் சார்ந்த பகுதிகளாம்.

## குடமலை நாடு கொண்டது

தற்காலத்தில் குடகு என்றழைக்கப்படும் பகுதியே குடமலைநாடு என்ற பெயர் பூண்டிருந்தது. இப்பகுதியையும் இராசராசன் தன் ஆட்சியின் கீழ்க் கொண்டு வந்தான். வேங்கைநாடு, குடமலை நாடு, கங்க மண்டலம் முதலிய பகுதிகளைப் பிடிப்பதற்கு ஏற்பட்ட போர்களை, முன்னின்று நடத்தியவன் மகாதண்டநாயகன் பஞ்சவன் மாராயன் என்பவன். இவன் இராசராசனுடைய அருமை மைந்தன் இராசேந்தர சோழனே என்பது வரலாற்றாசரியர்களுடைய கருத்து. மணிசன் என்ற ஒருவனுக்கு 'சத்திரிய சிகாமணி கொங்காள்வான்' என்ற பட்டத்தைச் சூட்டிக் குடமலை நாட்டுப் பகுதியை ஆள இராசராசன் வழி செய்தான்.

## கொல்லம் கொண்டது

கொல்லம் என்பது மலை நாட்டிலுள்ள ஓர் ஊராகும். இராசராசன் தண்டு கொண்டு கொல்லம் நகரையும் கைப்பற்றினான் என்று அறிகிறோம். முடிசூடியவுடன் இராசராசன் காந்தளூர்ச் சாலையைக் கைப்பற்றினான் என்று கண்டோம். அப்போது விழிஞத்தின் மீதும் படையெடுத்து அதைக் கைப்பற்றினான். கொல்லத்தைக் கைப்பற்றியது முதற்படையெடுப்பின் போதல்ல. இரண்டாம் முறை படையெடுத்த போது நிகழ்ந்தது என்று வரலாற்றாசிரியர்கள் கருதுகிறார்கள். முதலில் தோற்ற மலை நாட்டவர்கள் இடையிலே தலை தூக்கினர். ஆதலின் இரண்டாம் முறையும் இராசராசன் போர் முரசு கொட்ட வேண்டியதாயிற்று என்று இதிலிருந்து அறியலாம்.

## கலிங்கம் கைப்பற்றியது

வேங்கி மண்டலத்தைக் கைப்பற்றி அதில் சக்திவர்மனை முடிசூட்டிய பொழுது கலிங்கத்தின் ஒரு பகுதியையும் இராசராசன் கைப்பற்றியிருக்க வேண்டும். வேங்கியை அப்பொழுது ஆண்ட சடாசூடசோடன் கலிங்கத்தையும் கைப்பற்றி இருந்தானென்றும், அவனைத் தோற்கடித்தே வேங்கியைக் கைப்பற்றிச் சக்திவர்மனுக்குக் கொடுத்தானென்றும் முன்னர் கூறினோம். இதிலிருந்து கலிங்கத்தின் ஒரு பகுதியும் இராசராசனால் கைப்பற்றப்பட்டது என்பது தெளிவாகிறது.

## ஈழமண்டலம் அடிப்படுத்தியது

ஈழநாட்டை அப்போது மகிந்தன் என்பவன் ஆண்டு வந்தான். அவன், சேரனுடனும் பாண்டியனுடனும் சேர்ந்து சோழ அரசுக்குத் தொல்லை கொடுத்து வந்தான். எனவே இராசராசன் ஒரு படையை அனுப்பி ஈழத்தின் வடபகுதியை அடிமைப்படுத்தினான். சுமார் ஆயிரம் ஆண்டுகளாக ஈழத்தின் தலைநகராகத் திகழ்ந்த அநுராதபுரம் இப்போரினால் அழிந்தது. பொலனருவா என்ற நகரம் சோழர்களின் ஆட்சிக்குட்பட்ட ஈழத்தின் தலைநகராக மாறியது. பொலனருவா "ஜனநாத மங்கலம் ' என்று பெயரிடப் பெற்றது. ஈழத்து வெற்றியைக் குறிக்க இராசராசன் அழகிய ஒரு கற்றளியைப் பொலனருவாவில் தோற்றுவித்தான். இராசராசனின் கல்வெட்டுகள் ஈழத்தில் காணப்படுகின்றன. இராசராசபுரம் என்னும் 'மகாத்தி' என்ற இடத்திலும் குமரன் என்ற சோழ அதிகாரி இராசராசேச்சுரம் என்ற கோயிலை எழுப்பினான்.

## இரட்டபாடி ஏழரையிலக்கம் எறிந்தது

சுமார் கி.பி. 973-ல் சோழ நாட்டின் மேலைப் பகுதிகளை ஆண்ட இராட்டிரகூடர்களைத் தோற்கடித்து மேற்குச்சாளுக்கிய

வம்சம் நிறுவப்பட்டது. இராட்டிரகூடர் வசமிருந்த பகுதிகளெல்லாம் அப்பொழுது மேலைச் சாளுக்கியர் கையிலிருந்தன. மேலைச் சாளுக்கியர்களுள் சிறந்தவனான தைலபன் என்பவன் இறந்த பிறகு சத்யாச்ரயன் என்பான் சாளுக்கிய அரியணையில் ஏறினான். இராசராசன் சத்யாச்ரயனைத் தோற்கடித்து இரட்டபாடி ஏழரை இலக்கம் என்ற பகுதியினைக் கைப்பற்றினான். இப்போரை இராசராசனே முன்னின்று நடத்தினான் என்று அறிகிறோம். இராசராசன் பரிமீதமர்ந்து தனியொருவனாக சத்யாச்ரயனுடைய வெள்ளம் போன்ற படையைத் தடுத்து நிறுத்தினான் என்றும், அவனுடைய போர்க் களிறுகள் துங்கபத்திரைக் கரையில் எதிரிகளின் வரிசைக்குள் புகுந்து நர்த்தனமாடின என்றும், சாளுக்கிய தண்டநாயகன் கேசவன் கைப்பற்றப்பட்டான் என்றும் கரந்தைச் செப்பேடுகளிலிருந்து அறிகிறோம். அவ்வெற்றிக் களத்தில் நின்று இராசராசன் மண்ணைக்கடக்கத்தைக் கைப்பற்ற உறுதி பூண்டான் என்றும், அவ்வுறுதியை இராசேந்திரன் நிறைவேற்றினான் என்றும் மற்றொரு செய்யுள் குறிப்பிடுகிறது. கோட்டூர் என்ற இடத்தில் உள்ள சத்யாச்ரயனுடைய கல்வெட்டிலிருந்து போரின் கொடுமையை அறியலாம். அக்கல்வெட்டில் சோழகுலத்தைச் சேர்ந்த இராசராச நித்யவிநோதன் என்பவனுடைய மகன் நூர்மடிச்சோழ ராசேந்திரவித்யாதரன் என்பவன் சுமார் தொண்ணூராயிரம் தானைகளுடன் படையெடுத்தான் என்றும், கையிலகப் பட்ட நாட்டைச் சீர்குலைத்து அடாத செயல்களைச் செய்தான் என்றும் குறிக்கிறது. இப்போரில் தந்தையுடன் இராசேந்திரனும் சேர்ந்து போரிட்டான் என்றும், போர் மிகவும் கடுமையாக இருந்தது என்றும் அறிகிறோம். இரட்டபாடி ஏழரை இலக்கம் சோழ மண்டலத்தோடு சேர்க்கப்பட்டது. இப்போரின் முடிவில் துங்கபத்திரை ஆறு சோழப் பேரரசின் வடஎல்லையாக அமைந்தது.

## முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் வென்றது

தன்னுடைய ஆட்சியின் இறுதியில் முந்நீர்ப் பழந்தீவு பன்னீராயிரம் என்ற தீவுகளை இராசராசன் கைப்பற்றினான் என்று அறிகிறோம். காந்தளூர்ச்சாலையில் சேரர்களுடைய படைக்கலத்தை அழித்ததிலிருந்து தன்னுடைய கப்பற்படையைச் சீரமைத்து, கடல்கடந்த தீவுகளையும் வெல்ல வழி வகுத்தான் என்பது இதிலிருந்து புலனாகிறது.

## செழியரைத் தேசுகொண்டது

இராசராசன் முடிசூடியவுடன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்தான். அப்போது அமரபுசங்கன் என்பவன் பாண்டி நாட்டை ஆண்டு வந்தான். சுந்தரசோழர் காலத்தில் மதுரை கைப்பற்றப்பட்டது என்று கண்டோம். ஆனால் விரைவிலேயே அமரபுசங்கன் என்ற பாண்டியன் முடிசூட்டிக்கொண்டான். அவனுக்குச் சேர மன்னன் பாஸ்கர ரவிவர்மனும் ஈழத்துப் படையும் உறுதுணையாக நின்றன. இராசராசன் மலைநாட்டில் காந்தளூர்ச் சாலையைக் கைப்பற்றியவுடன் பாண்டிய நாட்டின் மீது படையெடுத்து, மதுரையையும் கைப்பற்றி அமரபுசங்கனையும் தோற்கடித்தான். பாண்டி மண்டலத்துக்கு இராசராசப் பாண்டி நாடு என்ற பெயரையே சூட்டினான்.

சோழ நாட்டைச் சுற்றியிருந்த பேரரசுகளையெல்லாம் ஒடுக்கிச் சோழப் பேரரசை நிலை நிறுத்தி, வடக்கே துங்கபத்திரையையும், கலிங்கத்தையும் எல்லையாக்கி, தெற்கே ஈழத்தை அகப்படுத்தி, கடல் கடந்த முந்நீர்ப் பழந்தீவுகளைக்

கைப்பற்றி ஒரு மாபெரும் பேரரசை நிலைநிறுத்திய பெருமை இராசராசனுக்கே உரியது. இராசராசன் இவ்வாறு திக்குவிசயம் செய்து மன்னர்களனைவரையும் கப்பம் கட்டுமாறு செய்ததின் பயனாய் இந்திரனைப் போல் மூவுலகைச் சேர்ந்தோரும் வணங்கத் தன் நகராம் தஞ்சையில் நலனே வீற்றிருந்தான் என்று திருவாலங்காட்டுச் செப்பேடு கூறுகிறது.

# திருமுறை கண்டது

அப்பர், சம்பந்தர், சுந்தரர் ஆகிய மூவர் முதலிகளால் பாடப்பெற்ற தேவாரத் திருமுறைகள் தில்லையம்பதியில் அடைபட்டுக் கிடந்தவற்றை நம்பியாண்டார் நம்பியின் பேருதவியால் கண்டு வெளிப்படுத்தியவன் நம் இராசராசனே. அப்பணியால் பண்சுமந்த பாடல்களும், தமிழும், சிவநெறியும், பக்தித்துறையும் பெற்ற பேறு அளப்பரிதாம். கொற்றவன் குடி உமாபதி சிவாச்சாரியார் அருளிய திருமுறை கண்ட புராணம் ஓரளவு அப்பெரும் பணியைப் புலப்படுத்திக் கொண்டிருக்கிறது. அதில் இராசராசன்:

> "உலகம் மகிழ்தரு 'சையம்' மீது தோன்றி
> ஓவாது வரு பொன்னி சூழ் சோணாட்டின்
> திலகம் என விளங்கும் மணி மாட ஆரூர்த்
> தியாகேசர் பதம் பணிந்து செங்கோல் ஓச்சி
> அலகு இல் புகழ்பெறு ராசராச மன்னன் - -
> அபய குல சேகரன்."

என்று அருமையாகக் குறிக்கப்பெறுகிறான். கதை இதுதான்: சிவபெருமான் மீது எல்லையில்லா பக்தி பூண்டொழுகியவன் இராசராசன். ஒரு நாள் தேவாரப் பாசுரங்களில் சிலவற்றை ஓதக்கேட்டான். செவிக்குத் தேனென இனித்த அப்பாக்கள் அவன் உள்ளத்தில் பாய்ந்து மெய் புளகிக்க, விழிநீர் அருவி பாய, ஒப்பிலிய ஓர் உணர்ச்சியை விளைத்தது. பாடியோரைக் கேட்டான் எவர் அருளிய பாடல் இவை என்று. அவர்கள் மூவரைப் பற்றியும்,

அவர்கள் அருளிய தெய்வப் பாசுரங்களைப் பற்றியும் அறிந்தவாறு எடுத்து உரைத்தார்கள். ஏனைய பல்லாயிரம் பாசுரங்கள் இருக்குமிடமெது எனக்கேட்க, பிறவற்றின் இருப்பிடம் யாதெனப் புலப்படுத்த அவர்களால் இயலவில்லை.

மிக்க ஆர்வத்தனாய் நாடெலாம் தேட ஆணையிடுகிறான். அப்படியும் அவை கிடைத்தபாடில்லை. அந்தச் சந்தர்ப்பத்தில் திருநாரையூரில் ஆதிசைவ மரபில் தோன்றிய நம்பியாண்டார் நம்பிகள் அவ்வூர்ப் பொல்லாப் பிள்ளையாரை அமுது படையலை உண்ணச் செய்யும் அற்புதம் நிகழ்த்தியும், அவர் பால் தமருடன் வளர்தரு சதுர்மறைகளைக் கேட்டு உணர்ந்தும் வருதலை இராசராசன் கேள்விப்படுகிறான். முக்கனிகளும், பால், தேன் முதலிய பற்பல உண்டிகளும் எடுத்துக்கொண்டு திருநாரையூருக்கு மல்லல் மிகு சேனையுடன் இராசராச மன்னவனும் வந்து சேர்ந்தான்.

வந்த மக்களையும் பண்டங்களையும் கொள்ள அந்நகரமே போதவில்லை. இராசராசன் நம்பியை அடிபணிந்து, வேழ முகத்தோனுக்குக் கொணர்ந்த பல பண்டங்களையும் எடுத்துரைத்து, அனைத்தையும் இப்பொழுதே அவனுக்குப் படைத்தருள்க! என வேண்டி நின்றான். நம்பி விநாயகனை அடிபணிந்து அனைத்தையும் உண்டருள வேண்ட, ஒன்று விடாமல் உண்டருளினார் பொல்லாப் பிள்ளையார். இந்த அற்புதத்தைக் கண்டு மெய் அரும்பி, உளம் நெகிழ்ந்து, விழிநீர் சோர, வியந்து, மகிழ்ந்து நின்ற மன்னர் மன்னன், இவர் உதவியால்தான் திருமுறைகளின் இருப்பிடத்தை அறிய முடியும் என்ற முடிவிற்கு வந்தான். மூவர் அருளிய திருமுறைகளை உலகில் விளக்கம் பெற நீர் அருளவேண்டும்! என நம்பிகளை வேண்டி நின்றான். நம்பிகளோ கண்ணீர் மல்கி, உள்ளம் கசிந்துருகி, பிள்ளையார் அடிபணிந்து மூவர்த்தமிழ்

இருந்தவிடம் தெரிந்தருள்க என, பொல்லாப் பிள்ளையார் தில்லைச் சிற்றம்பலத்தின் புறக்கடையின் பக்கம் கைமுத்திரையிட்ட அறையினுள்ளே அவை உள என உரைத்தார். அதைக் கேட்ட மன்னன் கிளர்ந்தெழுமனத்தினனாகித், திருச்சிற்றம்பலத்தை அடைந்து, காத்து பணிபுரியும் மறையோர்கள் பலருக்கும் 'கணபதி கூறியது இது' என்று நிகழ்ந்ததை எடுத்துரைத்தான். தில்லை வாழ் அந்தணர்களோ, 'அவற்றைச் செய்துவைத்த மூவர் வந்தாலன்றி அறையைத் திறக்க முடியாது' எனக் கூறினர்.

நுண்ணறிவு மிக்க இராசராசன் கூத்த வல்லானுக்குரிய ஆதிரைத் திருநாள் அன்று பெருவிழாவை எடுத்து, தமிழ்விரகர் மூவர் திருமேனிகளையும் எழுந்தருளுவித்து, மூவர் தமிழ் இருக்கும் அறையின் முன் கொணர்ந்து 'மூவரும் வந்தாயிற்று, இனி அறை திறக்கப்படலாம்' என ஆணையாக வெளிப்பட்டது இராசராசன் குரல். வேறுவழியின்றி அறைக்கதவு அந்தணர்களால் திறக்கப் பட்டது. ஏடு இருந்த இடத்தில் எழும்பியிருந்தது கரையான் புற்று. மன்னன் மாதுயரம் உற்றான். மண் செரிவை எல்லாம் நீக்கித் தைலக் குடங்கள் பலவற்றைச் சொரிந்து, செல்மடியச் செய்து, திரு ஏடுகளை எடுக்க, அளவற்ற ஏடுகள் அழிந்து பயனற்றதாய் விளங்கக் கண்டு, உள்ளம் நைந்து, அழுது புலம்பி அயர்ந்து நின்றான். அப்பொழுது 'சைவ நெறித் தலைவரெனும் மூவர் பாடல் வேய்ந்தன போல் மண் மூடச் செய்தே ஈண்டு வேண்டுவன வைத்தோம்' என்று ஓர் அசரீரி ஒலித்தது. அதைக்கேட்ட மன்னன் மண்டிய துயரம் மாற மகிழ்ச்சியுற்று, நம்பியாண்டார் நம்பி அடிகள் முடி சேர்த்து, நன்றிப் பெருக்கைப் புலப்படுத்தினான். சிவனடியார்க்கெல்லாம் உ வுக! என்று தனது பண்டாரத்தைத் திறந்து விட்டான்.

அத்தெய்வப் பாடல்களுக்குப் பண்டிருந்த வகையில் இசை அமைப்புச் செய்ய எண்ணினான். அந்த நோக்கத்தோடு திரு எருக்கத்தம்புலியூர் திருக்கோயில் சென்று சிவனை வணங்கி பண்ணமைக்கும் பணி சிறக்க உதவவேண்டுமென்று வேண்டிக் கொண்டான். இசையும், யாழும் வல்ல பாணர் குடியில் தோன்றிய நங்கை ஒருத்திக்குப் பண்ணியல்பு முழுவதும் பொருந்த அருள் புரிந்துள்ளோம் என்று இறைவன் எதிர் மொழிந்தான். அதைக் கேட்டு உளம் மகிழ்ந்த இராசராசன் அவளை அழைத்து வந்து அவளைக் கொண்டு பண்ணமைக்கும் வழி என்ன என்று சிந்தித்தான். அப்பொழுது, அவளை அழைத்து வந்து திருச்சிற்றம்பலத்தின் உள்ளே கூத்தப்பிரான் திருமுன்பு சகல மரியாதைகளுடனும் அமரச் செய்து, அவள் பணித்தவாறு அப்பாடல்களுக்கு இசை அமைப்பது பொருந்தும் என ஓர் ஒலி கேட்டது. அந்த ஒலியை மன்னன், நம்பி, மறையவர்கள், மற்ற பல சிவனடியார் முதலியோர் கேட்டார்கள். எனவே அதற்கேற்ப ஏழு திருமுறைகளாக மூவர் தமிழை வகுத்துப் பண் அமைத்து ஒப்பரிய மெய்ப்பணியைச் செய்து உயர்ந்தான்.

சொல்லொணாப் பெருமுயற்சியின் காரணமாக வெளிப்படுத்தப்பட்ட உண்மையும், இயல்பாகவே அப்பாசுரங்களின் தத்துவச் செறிவிலும், இலக்கிய நயத்திலும், பக்திச் சுவையிலும் ஈடுபட்டு மகிழும் ஆர்வமும் இராசராசனைத் திருமுறைச் செல்வனாகவே ஆக்கிவிட்டன. பல்லாயிரம் பாடல்கள் அநியாயமாக அழிந்தவை போக எஞ்சியுள்ள இச்சில்லாயிரம் பாடல்களாவது பொன்றாது பொலிய வேண்டும் என்ற பெருங்காதலால் இதற்கென ஒரு பெரும் அறக்கொடை நிறுவியிருக்கிறான். நாள் முழுதும் இடையீடின்றித் தேவாரத் திருப்பதிகங்களை ஓதிக்கொண்டே

இருப்பதற்காக நாற்பத்தெட்டு ஓதுவார்களையும், இரண்டு உடுக்கை, மத்தளக் கலைஞர்களையும் நியமித்திருக்கிறான். இவர்கள் ஐம்பது பேருக்கும் நாளொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் முக்குறுணி (இருபத்து நான்கு பட்டணம் படி) நெல் சம்பளமாகக் கொடுத்து வந்திருக்கிறான். இனியும், எக்காரணத்தினாலும், உள்ள பாடல்களுக்கும் ஊறு வந்துவிடக்கூடாது என்ற அக்கறையும், ஆர்வமுமே இதைச் செய்ய இராசராசனைத் தூண்டியிருக்க வேண்டும்.

# பெரியகோயில் எடுத்தது

இராசராசன் பெருநெறி பிடித்து ஒழுகியவன். சிறியன சிந்தியாதான் என்ற கம்பன் வாக்கிற்குச் சிறந்த எடுத்துக் காட்டாக விளங்கியவன். சிவனடி மறவாச் சிந்தையன். அருங்கலை வினோதன். பல்துறை அறிவும் நிரம்பிய நல்அறச்செல்வன். அருஞ்சமர் பல கண்ட பெரும் புகழாளன். வெற்றி பல கொண்டு பொன்னும், புகழும் பெருக்கியவன். மாற்றவர் பண்டாரங்களின் பொன்னை எல்லாம் திருப்பணிக்கும், அறப்பணிக்குமே அர்ப்பணித்தவன். அவன் காலத்தில் அவனாலும், அவனைச் சார்ந்தோராலும் எடுப்பித்த கற்றளிகள் பலவற்றுள்ளும் சிறந்த ஒன்றாய்த் திகழ்வது, 'இராசராசேச்சுரம் என்னும் தஞ்சைப் பெரிய கோயிலாகும். விண்ணளவுயர்ந்த விமானம், தக்கணமேரு எனப் புகழ் கொண்டு திகழ்கிறது. திருவுண்ணாழி (கருவறை), மிகப் பெரியது. இலிங்கம் ஆவுடையார் அப்படியே. இலிங்கத் திருமேனியை நீராட்ட மேனிலை ஆளோடிகள் அமைய, மேனிலையிலே தென்பால் சுவரிலே, நீர்த்தொட்டி அமைந்திருக்கும் அருமையையும் இங்குதான் காணமுடியும். அங்ஙனமே நந்தியும் பெரிது. மன்னன் உள்ளத்தைப் போலவே பன்னுபவை அனைத்தும் பெரிதாக அமைந்தன. தோற்றத்தால் மட்டும் அன்றி சூட்டிய பெயர்களும் பெரிது. பெரிய கோயில், பெருவுடையார், பெரிய நந்தி, பெரு விமானம், பெரும் சுற்று, மொத்தத்தில் பெரிய கோயில். பின்னே அமைத்த அம்மனையும் கூட அவன் வழி வந்தவர்கள் பெரிய நாயகியாகப் பெயரும் உருவும் கண்டிருக்கிறார்கள். அவன்

காலத்திற்கும் முன் வரை இருந்த கட்டடக்கலையில் அற்புத மாற்றமொன்றை ஆக்கிய முதல்வன் இராசராசன். ஆகம வழிபாட்டின் ஒரு கூறாக, வலம் வரும் பொழுது, கோயில் தூபி, விழு நீர்ப்போக்கு ஆகியவற்றைத் தாண்டியோ, மிதித்தோ செல்லவேண்டாத ஒரு அமைப்பை இவன் ஆக்கியிருக்கிறான். விமானக் கலசத்தின் நிழல், திருச்சுற்றில் விழாதவாறு அமைத்ததும், விழுநீர்ப் போக்கு ஒரு ஆள் உயரத்தின் மேல் ஓடி வந்து விழுமாறு அமைத்ததும், இவன் செய்த சிறந்த மாற்றங்களாகும். எனவே இந்த ஆலயத்து வழிபடுவோர் சோமசூத்ர பிரதட்சணம் என்று சொல்லுகின்ற நெறியை விடுத்து முழுப்பிரதட்சணம் செய்யும் வசதியை உண்டாக்கித் தந்திருக்கிறான். ஆகமரீதியாக அமைக்கப்பெற்ற இடைகழி (அந்தராளம்) வண்ணப் பட ஓவியங்கள் கலைப்பொலிவும், வரலாற்றுச் செய்திகளும் நிரம்பியதாக அமைக்கப்பட்ட அருமையை எவ்வளவு பாராட்டினாலும் தகும். அவற்றுள் தம்பிரான் தோழனான சுந்தர மூர்த்தியும், தடுத்தாட் கொண்ட சிவபெருமானும் காட்சி தரும் உன்னத ஓவியம் பெரிதும் குறிப்பிடத்தக்கது. அதில் காணப்படுகிற ஆவணமும், அவ்வாவணத்தில் உள்ள எழுத்துக்களும், வரலாற்றுத் துறைக்குக் கிடைத்த மணியான சான்றுகளாகும். மற்றொன்று, சுந்தரரும் சேரமானும் திருக்கயிலை செல்வதைச் சித்திரிப்பதாகும். முறையே பரிமேலும், கரிமேலும் அமர்ந்து கயிலை செல்லும், சேரமானும், சுந்தரரும் சிந்தைக்கு இனியவராய்த் திகழ்கின்றனர். இருவர் முகத்திலும், வளர்ந்து பொலியும் தாடியும், மீசையும், இவர்களின் யாத்திரைக் கால நீட்டத்தை உணர்த்துவதாகக் கொள்ளலாம். திரிபுரம் எரித்த விரிசடைக் கடவுள் திகழ்தரும் ஓவியம், தெய்வக்கலையோடு மிளிர்கிறது. உடலின் அமைப்பும், சினம் காலும், திருமுகச்

செல்வியும், ஓவியக்கலையும், உயிராகக் திகழ்கின்றன. இங்ஙனமே மற்றும் பல புனை ஓவியங்கள் அழகும், கருத்தும் அமைந்து அக்காலச் சிற்பங்களின் கை வண்ணத்தைக் காட்டுகின்ற வரலாற்று ஏடுகளாகும்.

இவன் வாரி வழங்கிய பொன்னும், பொருளும், போன இடம் காணமுடியாவிட்டாலும், ஆடலுக்கும், பாடலுக்கும், அருங்கலைக்கும், வழிபாட்டிற்கும் வைத்த நிலம், வழிமாறிப் போனாலும், இவன் எழுந்தருளுவித்த படிமங்களும், செப்புத் திருமேனிகளும், இன்றும் நின்று இவன் புகழ் பரப்பிக் கொண்டிருக்கின்றன. இத்திருக்கோயிலுக்கு ஆண்டுக்கு 1,20,000க்கு மேற்பட்ட கல நெல் வரக்கூடிய நிலங்களும், 4000க்கும் மேற்பட்ட கறவைப் பசுக்களும், 4000க்கும் மேற்பட்ட சாவாமூவாப் பேராடுகளும், 100க்கும் மேற்பட்ட கார்எருமைகளும் இவன் வழங்கியிருக்கிறான். எல்லாத் திருமேனிகளுக்கும், இவனும், இவன் திருத்தமக்கையும், இவன் பெண்டுகளும், இவன் அரசியல் கரணத்தாரும், கொடுத்த அணிகலன்களும், பரிகலன்களும், அளப்பரியன. ஆகம நெறியில் வழிபாட்டிற்குரிய பல்வேறு இசைவாணர்களும், ஆடல் மகளிரும், ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் நியமிக்கப் பெற்றிருக்கிறார்கள். நாளும் பொழுதும் விழா மலிந்து விளங்கியது இராசராசேச்சுரம். சீகார்யம் என்றும், திருக்கோயில் நிர்வாகம் என்றும் பல துறையாகப் பிரிக்கப்பட்டிருந்திருக்கிறது. மாகேச்வரக் கண்காணிகளின் தலைவராக, அரச குருவாகிய ஈசான சிவன் அரும்பணி ஆற்றியிருக்கிறார். திருக்கோயில் உள்பட சமயத்துறை முழுவதும், இவன் நம்பிக்கைக்கு உகந்த இவன் குடியில் தோன்றிய, பேரறிஞரான, ஆதித்தன் என்னும் பெயருடைய மூவேந்தவேளான்

பொறுப்பில் இருந்து வந்திருக்கிறது. அரசியலுக்கு அமைந்த சிறந்த விதிமுறைகளைப் போன்று ஆலய நிர்வாகங்களுக்கும், அருமையான விதிமுறைகள் வகுத்து நடைமுறையில் செயல்படுத்திய அறங்காத்த திறலுடையோனாக இராசராசன் திகழ்கிறான். வழிவழி வந்த மரபினருக்கு உரிமை உண்டென விதி வகுத்த அவன், அவரவர்க்கும் உரிய அறிவையும், ஆற்றலையும், திறமையையும், ஒழுக்கத்தையும், பெரிதும் வற்புறுத்தி உள்ளான். ஒவ்வொரு குடிக்கும் காணியாட்சியைக் கொடுத்துக் கடமையை நிறைவேற்றச் செய்த அவன், அக்குடியில் தகுதி உடையவன் இல்லாத போது, அக்குடியினரே தகுதி உடையார் ஒருவரைத் தமக்காகக் கடனாற்றச் செய்யும் உரிமையை வழங்கினான். அக்குடியில் எவரும் இல்லாது ஒழியின் குறிப்பிட்ட அப்பணிக்குத் தக்காரை நியமிக்கும் அதிகாரத்தை அறம் ஆயும் குழுவுக்கு வழங்கியுள்ளான். அங்ஙனம் நிகழாத போது, இறுதி கட்டத்தில் அரசு தலையிட்டு ஆவன செய்ய வழியும் வகுத்துள்ளான்.

இவன் காலத்துக் கல்வெட்டு போன்ற பிடிபாடுகள், சீரான எழுத்தில் செம்மையாக அமையப்பட்டுள்ளன. அவற்றுள் காணப்படும் எவையும், மிகத்துல்லியமாகக் கணித்து உணர்த்தப்படுகின்றன. சிறிய பொன் அணிக்குத் தருகிற விளக்கத்தைப் போலவே, பெரிய செப்புப் படிமங்களுக்கும் அளவைகள் உள்படத் தோற்ற வேறுபாடுகள் புலப்பட, அழகிய திருப்பேரும் சூட்டி, புலப்படுத்தப்படுகின்றன. இவனுக்கு முன்னும் பின்னும் எந்த மண்டலத்து எம்மன்னனும் இங்ஙனம் எண்ணி, அளந்து, நிறுத்து, சாற்றி, கணித்து விளக்கம் தந்தவர் எவருமில்லை என்று துணிந்து கூறலாம். இவற்றை எல்லாம் நாம் ஆழ்ந்து சிந்திக்கும் போது, எக்காலத்தும் எவ்வித குழப்பத்திற்கும் இடமின்றி எதையும்

தெள்ளிதின் உணர்த்த வேண்டும் என்ற அக்கறையும், இவனுடைய ஆழ்ந்தகன்ற கூரிய நுண்ணறிவும் எவருக்கும் நன்கு புலப்படும்.

தன்னாட்சிக்கு உட்பட்ட நிலப்பரப்பு முழுவதையும், வளநாடு (District), கூற்றம் அல்லது நாடு (Taluk) என்று வகையறுத்தும், நிலங்களை அளவெடுத்தும், அடங்கல் ஏடுகளையும் அமைத்தான். மேலும் மேலும், அவற்றை நெறிப்படுத்திக் காத்துப் புரப்பதற்குக் கூறு செய்வார்களையும் நியமித்துள்ளான்.

தமிழகத்து வரலாற்றுத்துறைக்கு ஒரு சிறந்த சான்றாகத் திகழ்கிற மெய்க்கீர்த்திக்குச் செவ்விய முறையில் அடிகோலியவன் இராசராசனே. இவனுடைய மொழிப் பற்றும், கலைப் பற்றும் சமயப்பற்றும், ஒப்புயர்வற்றவை. எத்துறையையும் பொது மக்களுக்கென்றும், அறிஞர்கட்கென்றும் இருவேறாக வகுத்து எழில் பெருக்கியவன் இவனே. தமிழ்க்கூத்து, ஆரியக்கூத்து என்றெல்லாம் நெறிப்படுத்திய அறிஞன் இவனே. எக்கலையும் இறைவன் திரு முன்றிலில் எழில் சுரக்க வழிகோலியதுடன், அவ்வவற்றைக் கற்றோர்க்கெல்லாம் கற்பித்து அக்கலைகளை விளக்க ஆசிரியன்மார்களையும், அவற்றைக் கண்காணிப்பவர்களையும் நியமித்த அறவோன். ஆகையினாலே தான் பண்டித சோழன் என்று பாராட்டப் பெற்றான். சோழ மன்னர்களுக்குள்ளே பல்துறை அறிவும் நிரம்பியவன் என்பதை உணர்த்தவே அக்காலத்துப் புலவர் பெருமக்களே இவனைப் பண்டித சோழன் என்று பரவி மகிழ்ந்தனர் போலும்!

# செப்புத் திருமேனிகள்

தஞ்சை இராசராசேச்சுரமுடையார் கோயிலுக்கு இராசராசனும், அவர் திருத்தமக்கை குந்தவையும், மாதேவியரும், பல அதிகாரிகளும், மற்றவர்களும் செப்புத் திருமேனிகளை எழுந்தருளுவித்துள்ளனர். அவை வருமாறு :

## இராசராசன் எழுந்தருளுவித்த திருமேனிகள்

1) சீபலி எழுந்தருளும் பொன்னின் கொள்கைத்தேவர்.
2) தட்சிணமேருவிடங்கர்.
3) ஆடவல்லார்.
4) மகாமேருவிடங்கர்.
5) மகாமேருவிடங்கர் நம்பிராட்டியார்.
6) தஞ்சை விடங்கர்.
7) சண்டேச்வர பிரசாத தேவர்.
8) பஞ்சதேக மூர்த்திகள்
9) சுப்பிரமண்ய தேவர்.
10) தட்சிணா மூர்த்திகள்.
11) மகாவிட்ணுக்கள் நம்பிராட்டியார்.
12) மகாவிட்ணுக்கள் நம்பிராட்டியார்.
13) சண்டேச்வா தேவர்.

14) நிருத்தம் செய்தருளுகின்றாராகக் கனமாக எழுந் தருளுவித்த பிள்ளையார் கணபதியார்.

15) நிருத்தம் செய்கின்றாராகக் கனமாக எழுந்தருளுவித்த பிள்ளையார் கணபதியார்.

16) நின்றாராக எழுந்தருளுவித்த பிள்ளையார் கணபதியார்.

17) நின்றாராக எழுந்தருளுவித்த பிள்ளையார் கணபதியார்.

18) சுகாசனம் இருந்தாராக எழுந்தருளுவித்த பிள்ளையார் கணபதியார்.

19) சுகாசனம் எழுந்தருளியிருந்தாராக பிள்ளையார் கணபதியார்.

20) சுகாசனம் எழுந்தருளியிருந்தாராக பிள்ளையார் கணபதியார்.

## இராசராசன் திருத்தமக்கையார், குந்தவையார் எழுந்தருளுவித்த திருமேனிகள்

1) ஆடவல்லார் நம்பிராட்டியார் உமாபரமேச்வரி.
2) தக்கணமேருவிடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேச்வரி.
3) தஞ்சை விடங்கர் நம்பிராட்டியார் உமாபரமேச்வரி.
4) பொன் மாளிகைத் துஞ்சினதேவர்.
5) குந்தவையார் தம்மையாக எழுந்தருளுவித்த திருமேனி.

## மாதேவியர் எழுந்தருளுவித்த திருமேனிகள்

**ஒலோக மாதேவி** 1) திருவடி நிலையில் எழுந்தருளி எழுந்தருளுகின்றாராகக் கனமாக எழுந்தருளுவித்த பிச்சதேவர்.

| | | |
|---|---|---|
| சோழ மாதேவி | 1) | ஆடவல்லார். |
| | 2) | ஆடவல்லார் நம்பிராட்டியார் உமாபரமேச்வரியார். |
| | 3) | ரிசபவாகன தேவர் |
| | 4) | ரிசபவாகனதேவர் நம்பிராட்டியார் உமாபரமேச்வரியார். |
| | 5) | ரிசபம். |
| அபிமானவல்லி | 1) | இலிங்கபுராண தேவர். |
| த்ரைலோக்ய மகாதேவி | 1) | கல்யாணசுந்தரர். |
| பஞ்சவன்மாதேவி | 1) | தஞ்சை அழகர். |
| | 2) | தஞ்சை அழகர் நம்பிராட்டியார் உமாபரமேச்வரியார். |
| | 3) | கணபதி. |
| | 4) | பதஞ்சலி தேவர். |
| பிருத்வி மகாதேவி | 1) | சீகண்ட மூர்த்தி. |
| இலாட மாதேவி | 1) | பாசுபத மூர்த்தி. |

## அதிகாரிகள் எழுந்தருளுவித்த திருமேனிகள்

உடையாருக்குக் காரியஞ் செய்கின்ற பொய்கை நாடு கிழவன் ஆதித்தன் சூர்யன் ஆன தென்னவன் மூவேந்த வேளான்.

1) நம்பி ஆரூரர்.
2) நங்கை பரவையார்.
3) திருநாவுக்கரையர்
4) திருஞானசம்பந்தர்.

5) பெரிய பெருமாள்.
6) பெரிய பெருமாள் நம்பிராட்டியார்
ஒலோக மாதேவி
7) பெரிய பெருமாளுக்குத் தேவார தேவராக
எழுந்தருளுவித்த தேவர் சந்திரசேகர தேவர்.
8) தத்தா நமரே காண் என்னும் மிலாடுடையார்.
9) சேத்ர பாலர்.
10) ஆடுகிறாராகக் கனமாக எழுந்தருளுவித்த
சீபைரவமூர்த்திகள்.
11) சிறுத்தொண்ட நம்பி.
12) திருவெண்காட்டு நங்கை.
13) சீராள தேவர்.

சிறுதனத்துப் பெருந்தரம் கோவன் அண்ணாமலையான கேரளாந்தக விழுப்பரையன்.

1) பிருங்கீசர்.
2) சூர்ய தேவர்

அதிகாரிகள் காஞ்சிவாயிலுடையார் உதையதிவாகரன் தில்லையாளியாரான இராசராசமூவேந்தவேளார்.

1) கிராதார்ச்சுன தேவர்.

நித்தவிநோத வளநாட்டு நல்லூர் நாட்டுப் பஞ்சவன் மாதேவி சதுர்வேதி மங்கலத்து வடுகன்.

1) துர்க்கா பரமேச்வரி.

இராசராச தேவர் பெருந்தனம் கத்தி அரையன். மகன் கண்டையனான இராசராச கத்தி அரையன்

1) காளபிடாரி.

# திருவிழாக்கள்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில், கீழ்க்கண்ட திருவிழாக்கள் நடைபெற்றன :

| | |
|---|---|
| ஆட்டைப் பெரிய திருவிழா | 9 நாட்கள் |
| இதில், கொடியேற்று நாள். | 1 நாள் |
| ஆடவல்லார் எழுந்தருளும் நாள் | 3 நாட்கள் |
| திருச்சதையத் திருவிழா | 12 நாட்கள் |
| திருக்கார்த்திகை நாள் எழுந்தருளும் விழா. | 1 நாள் |
| சங்கிராந்தி நாள் | 12 நாட்கள் |

ஆகத் திருவிழா எழுந்தருளும் நாள்: முப்பத்து நாலு.

# பணிமக்களும், கூலி வகையும்

தஞ்சைப் பெருவுடையார் கோயிலில் பணிபுரிந்த பணி மக்களும், அவர்கள் பெற்ற கூலி வகையும் கல்வெட்டுகளால் அறிய முடிகிறது:

| பணி மக்கள் | பேர் | ஆள் ஒன்றுக்கு கூலி | |
|---|---|---|---|
| | | ஆண்டு | நெல் (கலம்) |
| கணக்கெழுதுவான் | 6 | 1 | 200 |
| கீழ்க்கணக்கு | 12 | 1 | 75 |
| தளிச்சேரிப் பெண்டுகள் | 400 | 1 | 100 |
| நட்டவம் செய்வான் | 6 | 1 | 200 |
| கொட்டாட்டுப் பாட்டு | 5 | 1 | 150 |
| கானபாடி | 5 | 1 | 150 |
| வங்கியம் | 2 | 1 | 150 |
| பாடவியம் | 4 | 1 | 200 |
| உடுக்கை வாசிப்பான் | 2 | 1 | 150 |
| வீணை வாசிப்பான் | 2 | 1 | 150 |
| தமிழ் பாடுவான் | 4 | 1 | 150 |
| ஆரியம் பாடுவான் | 3 | 1 | 150 |
| கொட்டி மத்தளம் | 2 | 1 | 100 |
| முத்திரைச் சங்கு | 3 | 1 | 100 |
| பக்கவாத்தியம் | 5 | 1 | 75 |
| காந்தர்வன் | 20 | 1 | 75 |
| திருவாய்க் கேழ்வி | 7 | 1 | 100 |

| | | | |
|---|---|---|---|
| தளிச்சேரிப் பெண்டுகளுக்கும், காந்தர்விகளுக்கும் | | | |
| நாயகம் செய்வான் | 2 | 1 | 200 |
| கணக்கு | 4 | 1 | 200 |
| கீழ்க்கணக்கு | 8 | 1 | 150 |
| உவைச்சர் | 11 | 1 | 50 |
| சகடை கொட்டிகள் | 11 | 1 | 50 |
| திருப்பள்ளித் தொங்கல் பிடிக்கும் ஆளுக்கு உள்படுவான் | 1 | 1 | 100 |
| ஆள் | 10 | 1 | 50 |
| விளக்குடையார்களுக்கு உள்படுவான் | 1 | 1 | 100 |
| ஆள் | 7 | 1 | 50 |
| நீர்தெளியான் | 4 | 1 | 50 |
| சன்னாளியன் | 2 | 1 | 75 |
| திருமடைப்பள்ளிக் குசவருக்கு உள்படுவான் | 1 | 1 | 100 |
| ஆள் | 10 | 1 | 50 |
| வண்ணத்தார் | 2 | 1 | 100 |
| காவிதிமை செய்வான் | 2 | 1 | 50 |
| நாவிதம் செய்வான் | 2 | 1 | 50 |
| திரு (கணி) | 1 | 1 | 100 |
| ஷெ கீழ் ஆள் | 2 | 1 | 50 |
| கோலினிமை செய்வார் | 2 | 1 | 150 |
| அம்பட்டன் | 1 | 1 | 100 |
| தய்யான் | 2 | 1 | 100 |
| ரத்தினத் தய்யான் | 1 | 1 | 150 |

| | | | |
|---|---|---|---|
| கன்னான் | 1 | 1 | 100 |
| தச்சு ஆசாரியம் | 1 | 1 | 150 |
| ஷெ ஆள் | 2 | 1 | 150 |
| தச்சு | 2 | 1 | 75 |
| பாணன் | 4 | 1 | 150 |
| கண்காணித் தட்டான் | 1 | 1 | 100 |
| திருமெய்க்காப்பு | 118 | 1 | 100 |
| பண்டாரம் செய்வார் | 4 (இப்பகுதி சிதைந்துள்ளது). | | |
| திருப்பரிசாரகம் செய்வான் | 166 நாள் - 1 பதக்கு | | |
| நிலையாய் தீட்சித்தார் | 10 நாள் - 3 குறுணி | | |

# தஞ்சாவூர்த் தெருக்கள்

தஞ்சாவூரில் கீழ்க்கண்ட தெருக்கள் இருந்தன.

தெருவு தஞ்சாவூர்ப் புறம்படி

1. காந்தர்வத் தெருவு
2. மடைப்பள்ளித் தெருவு
3. வில்லிகள் தெருவு
4. ஆனை கடுவார் தெருவு
5. ஆனை ஆட்கள் தெருவு
6. பண்மையார் தெருவு
7. சாலியத் தெருவு

தஞ்சாவூர் உள்ளாலை

1. சாலியத் தெருவு

பெருந்தெருவு தஞ்சாவூர்ப் புறம்படி

1. மும்முடிச் சோழப்பெருந்தெருவு
2. நித்தவிநோதப் பெருந்தெருவு
3. வீர சிகாமணிப் பெருந்தெருவு
4. வீர சோழப் பெருந்தெருவு
5. செயங்கொண்ட சோழப் பெருந்தெருவு
6. இராச வித்யாதரப் பெருந் தெருவு
7. சூர சிகாமணிப் பெருந்தெருவு

பேரங்காடி — தஞ்சாவூர்ப் புறம்படி

1. திருபுவன மாதேவி பேரங்காடி

வேளம் — தஞ்சாவூர்ப் புறம்படி

1. உத்தமசீலியர் வேளம்
2. அபிமான பூசணத்தெரிந்த வேளம்
3. உய்யக் கொண்டார் தெரிந்த திருமஞ்சனத்து வேளம்
4. அருமொழித் தேவர் தெரிந்த திருபரிகளத்தார் வேளம்
5. இராசராசத் தெரிந்த பாண்டித் திருமஞ்சனத்து வேளம்

மடவிளாகம் — தஞ்சாவூர்ப் புறம்படி

1. ரவுத்ர மகாகாளத்து மடவிளாகம்

படை வீடு — தஞ்சாவூர்ப் புறம்படி

1. இராசராசப் பிரம்ம மாராயப் படைவீடு.

